உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


| | | |
|---|---|---|
| தொகுதி 7 | துன்மதி௵ ஆவணி௴ ௧௳<br>1921௵ ஆகஸ்ட்௴ 16௳ | பகுதி 2 |


## கடவுள் வணக்கம்.

எந்தநாள் கருணைக் குரித்தாகு நாளெனவு
மென்னிதய மெனவாட் டுதே
வதென்று சொல்லுவேன் முன்னெடுபின் மலைவறவு
மிற்றைவரை யாதுபெற் றேன்
பந்தமா னதிவிட்ட மெழுகாகி யுள்ளம்
பதைத்துப் பதைத்துரு கவோ
பரமசுக மாவது பொறுப்பரிய துயரமாய்ப்
பலகாலு மூர்ச்சிப் பதோ
சிந்தையா னதுமறிவை யென்னறிவி லறிவான
தெய்வநீ யன்றியு ளதோ
தேகநிலை யல்லவே யுடைகப்பல் கப்பலாய்த்
திரையாழி யூடுசெ லுமோ
சொந்தமா யாண்டநீ யறியார்கள் போலவே
துன்பத்தி லாழ்த்தன் முறையோ
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபாஞ்
சோதியே சுகவா ரியே.

பாயப் புலிமுன மான்கன்றைக் காட்டும் படியகில
மாயைப் பெரும்படைக் கேயிலக் காவெனை வைத்தனையோ
நீயெப் படிவகுத் தாலுநன் றேநின் பெருங்கருணை
தாயொத் தடியர்க் கருள்சச்சி தானந்த தற்பரமே.

செய்யுந் தவஞ்சற்று மில்லாத நானுன் றிருவடிக்கே
கொய்யும் புதுமல ரிட்டுமெய் யன்பர் குழாத்துடனே
கையுஞ் சிரமிசைக் கூப்பிநின் றூடிக் கசிந்துருகி
உய்யும் படிக்கருள் செய்வதென் றோபுலி யூரத்தனே.

# ஆனந்தபோதினி

துன்மதிஞூ ஆவணிமீ௴ கூ

## ஆன்மா.

'ஆன்மா' என்பது மூன்றே யெழுத்துக்களா லாய ஒரு சிறு வார்த்தையே யாயினும், அதன் பொருள் விவகரிப்பதற்கு அபார மானதாகும். அதைப் பூரணமாக விவகரிக்கப் போதுமான ஆற்றல் நமக்கில்லை யெனினும், ஒருவாறு நமது சிற்றறிவிற் கெட்டியவரை அதைப்பற்றி ஆன்றோர் கூறியுள்ள வற்றைச் சுருக்கமாகக் கூறுவாம்.

ஆன்மா என்பது எவ்வித ரூபமுமில்லாத சூக்குமவஸ்து. அது இத்தகைய தென்று சுட்டிக்காட்டக் கூடாதது. எவரும் அதைக் குறிப்பாய்க் காட்ட முடியாது. அதை யொருவன் அறியவேண் டின் மிகப்பாடுபட்டுக் கடைசியில் தனக்குத் தானே யனுபவித் தறியவேண்டு மன்றி, இன்னொருவர் கூறுவதனாலேயே தெரிந்து கொள்ளத் தக்கதல்ல. அது சூக்குமத்தில் அதிசூக்கும மானதென் றும், அகண்டத்தில் மகா அகண்டமான தென்றும் முதல் நூல் கூறு கிறது. அது, பரமான்மா என்ன இலட்சண முடையதோ அதே இலட்சண முடையது. அதாவது சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று இலட்சணங்களை யுடையது.

சத்து:—என்றால், முக்காலத்து மழியாமல் என்று முள்ளது என்று பொருள். ஆன்மா என்று மழியாத நித்தியப் பொருளென் பதை யெம்மதத்தினரும் மறுக்கார்.

சித்து.—என்றால், "சுயப்பிரகாச முடையதாய், அன்னிய பிரகாச த்தை விரும்பாமல், தன் பிரகாசத்தால் யாவற்றையும் விளக்கி வைப்பது." என்று பொருள்.

ஆனந்தம்.—என்றால், "துக்கமற்றதும் சலிப்பில்லாததுமான திருப்தி யுடையது" என்று பொருள்.

ஆன்மாவிற்கும் பரமான்மாவிற்கும் அளவினால் பேதமேயன்றிக் குணத்தில் பேதமில்லை. ஆன்மா பரமான்மாவி னின்றும் வேறானதல்ல; அதின் ஓர் இலவலேசமாகிய அம்சமேயாகும். பரமான்மாவையன்றி யான்மாவிற்கு வேறு இருப்பிடமில்லை. எல்லா வஸ்துக்களுக்கும் பரமான்மாவே யிருப்பிடம். ஆன்மாவின் வல்லமை அபாரமானது. ஆன்மாவை யறிவதற்கு எல்லாவற்றினும் மிக்கரூக்குமமான அறிவு வேண்டும். அதை யறிவதே ஒருவன் செய்யத்தக்க எல்லாக் காரியங்களினும் மிகக் கஷ்டமானது. ஆனால் அசாத்திய மானதல்ல. ஆன்மாவை யறிவதற்கே ஆத்மஞானம் என்று கூறப்படுகிறது. அதை யறிந்தோரே மகான்கள் என்றும் பிரம்மஞானிக ளென்றும் கூறப்படுகிறார்கள்.

ஆத்மஞான ஆராய்ச்சியிலும் அனுபவத்திலும் நமது முன்னோரே உலகில் முதன்மை யானவர்கள். பாரதபூமியாகிய இப்புண்ணியபூமியே ஞானம் பிறந்த பூமியாகும், இந்த ஆத்மஞானத்தைப் பற்றி நம் முன்னோர் நூல்களில் விரிவாய்க் கூறியிருப்பது போல் உலகில் வேறெந்த நூலிலும் கூறப்படவில்லை.

ஆன்மஞானம் ஒன்றே நம்மைப் பிறப்பிறப்பற்ற நித்தியானந்தப்பதவியில் சேர்க்க வல்லது. ஆன்மாவை யறிவதே பரமான்மாவை யறிவதற்கு வழியாகும். ஆன்மாவை யறியும் மார்க்கம் ஞானகுருவைக்கொண்டு அறிந்து கொள்ளத் தக்கதாகும். அதையனுபவமா யறிந்தோரே யின்னொருவர்க்கு வழிக்காட்டக் கூடியவர்கள். இத்தகைய அதிசயப் பொருளாகிய ஆன்மா எங்கிருக்கிறது?

சிலர் "மனிதனில் மட்டுமே ஆன்மா இருக்கிறது; மற்ற மிருக பட்சி ஊர்வன நீர்வாழ்வன முதலிய இவற்றில் கூட ஆன்மா இல்லை" எனக் கருதியிருக்கின்றனர். அந்தோ! இவ்வாறு கருதுவது ஆன்ம லட்சணமே யறியாத் தன்மையாகும் என்று எளிதில் உணரக்கிடக்கிறது. எவ்வாறெனின்,

இன்னார், பகுத்தறி வென்பதே ஆன்மாவெனத் தடுமாற்ற முறுகின்றனர். ஆழ்ந்து சிந்திக்கின், மிருக பட்சியாதிகளுக்கும் அவ்வவற்றிற்கு அவசியமான பகுத்தறிவு இயற்கையிலேயே அமைந்திருக்கிறது 'என்றுணரலாகும். அதை நாம் இயற்கையறிவு என்கி

றேம். சிலர் அவற்றிற்குக் கடவுள் ஒருவர் இருக்கிறுரென்று தெரியாதாகையால், அவற்றிற்கு ஆன்மா இல்லை யென்று கருதுகின்றனர், 'அவற்றிற்குக் கடவுள் ஒருவர் உளர் என்பது தெரியாது' என்பது நமது உத்தேசமே யன்றி, எப்படி நிச்சயமாகக் கூறக்கூடும்? அவற்றின் பாஷை நமக்குத் தெரியாது. அப்படியேயிருந்தாலும், மனிதரில் எத்தனையோ பேர் கடவுளின் இருப்பையுணராதவர்களாகவும், கடவுள் என்ற ஒன்று இல்லவே யில்லையென்று கருதுகிறவர்களாகவும் இருக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் ஆன்மா இல்லை யென்று யார் கூறுவார்கள்?

பகுத்தறிதல் என்ருல் பிரித்தறிதல், அதாவது இது நல்லது இது கெட்டதென உணர்தல் என்பதே பொருள். ஒரு ஆடு, தான் ஒருபோதுங் காணுதிருந்தாலும், புலியைக் கண்டதே அது தன்னைக் கொன்றுவிடுமென் றுணர்ந்து அலறி யோடுகிறது. ஆனல் ஒரு குழந்தையோ, புலி அல்லது விட நாகம் தன் அருகில் வந்தால் அது தன்னைக் கொல்லும் என்பதை யறியாமல், அதைத் தாவிப் பிடிக்க முயலும். இதனல் குழந்தைகளுக்கு ஆன்மா இல்லை யெனலாமோ?

மனிதன் நித்திரை செய்யும்போது உஸ்வாச நிஸ்வாசத்தோடு மட்டும் இருக்கிறுனே யன்றி, எவ்வித அறிவு மில்லாதவனு யிருக்கிறுன். அதனல் அவனுக்கு ஆன்மா இல்லை யெனலாமோ? இன்னும் மனிதன் மூர்ச்சை யடைந்திருக்கையில் உஸ்வாச நிஸ்வாசங் கூட இன்றிச் சவம்போல் இருக்கிறுன். அவனுக்கு ஆன்மா இல்லையோ?

இவர்களுக்கெல்லாம் ஆன்மா இருக்கவே யிருக்கிறது. ஆனல் அது பலவித நிலைகளிலிருக்கிறது. சிலவற்றில் நாம் நித்திரையி லிருப்பது போன்ற நிலையில், எவ்வித உணர்ச்சியுமின்றி யிருக்கிறது. சிலவற்றில் பரிச வுணர்ச்சியோடுமட்டு மிருக்கிறது. சிலவற்றில் பரிசம், சத்தம் ஆகிய இரண்டு உணர்ச்சிகளோடு மிருக்கிறது. இப்படி படிப் படியாய்க் கடைசியில் சாக்கிர நிலையிலுள்ள மனிதனில் முழு அறிவின் பிரகாசத்தோடும் விளங்கிக்கொண் டிருக்கிறது.

பரமான்மாவே கடவுள். உலகிலுள்ள எல்லா ஆன்மாக்களும் எங்கும் நிறைந்த பரமான்மாவின் ஓர் பாகமே. பரமான்மாவை அன்றி ஆன்மாக்கள் இல்லை. கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறபடி

யால் ஆன்மா இல்லாத இடமே யில்லை. ஆன்மா இல்லாத இடம் ஒன்றுளதேல் அங்குக் கடவுள் இல்லையாகும். இது எவரும் மறுக்கொணு விஷயம்.

ஆகையால் ஆன்மா இந்த அண்டரண்ட சராசரங்களெங்கும் நீக்கமற மயிர் முனைக்கு மிடமற நிறைந்து ஏக சொரூபமாக விருக்கிறது. கல் முதலியவற்றில் சற்றும் உணர்ச்சியின்றி மனிதன் மூர்ச்சையில் இருப்பது போன்ற நிலையிலிருக்கிறது. மரம், செடி முதலிய தாவரங்களில் பரிச உணர்ச்சி மட்டும் பொருந்தி யிருக்கிறது. இவ்வாறே சிலவற்றில் ஈரறிவு, சிலவற்றில் மூன்றறிவு, சிலவற்றில் நான்கறிவு, சிலவற்றில் ஐந்தறிவு பொருந்தியதாகவும், மனிதனில் சகல அறிவுகளும் நிறைந்ததாகவும் பிரகாசிக்கிறது.

இந்த உண்மையை யறிந்தே நம் முன்னோர் "மரம் செடிகளைச் சேதிப்பதும் பாபம். ஆனல் பழுத்த இலை, காய்கனிகளைப் பறிக்கலாம், ஏனெனின் நமது உரோமம் நகம் இவற்றைச் சேதித்தால் நமக்கெப்படித் துன்புறுத்துவ தில்லையோ, அதுபோல அவற்றிற்குத் துன்ப முண்டாவதில்லை" என்று கூறியிருக்கின்றனர்.

இந்த ஆன்ம சொரூபத்தை யறிவதே மேலான ஞானமாகும். நாம் முன் கூறியதுபோல், முதலாவது, மனிதன் தனக்குள்ளிருக்கும் கண்டமாகிய ஆன்மாவை யறிந்து பிறகே அகண்டமாகிய பரமான்மாவை யறியவேண்டும். தனக்குள் இருக்கும் ஆன்மாவை யறிவதே தன்னை யறிவதென்பது. தன்னை யறிந்தபின் தலைவனுகிய பரமான்மாவை யறிந்து அதில் ஒன்றுபட்டு விடவேண்டும். இதுவே பிரம்மக்கியான மென்பதும் மோக்ஷ நிலை யென்பதும்.

இதை யடைவது சாத்தியமானதே. ஆனல் இதனினும் கஷ்டமானது வேறொன்று மில்லை. அதனுல் யாவரும் இந்த நித்தியானந்த நிலையைப் படிப் படியாக வேனும் அடையும் வண்ணம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு சோபானங்களும் எண்ணிறந்த நூல்களும் ஏற்பட்டிருக்கின்றன. உலகில் நமது முன்னோர்கள் தான் அநாதி காலத்திலேயே இம்மகத்தான ஞானத்தை யடைந்து அதை யடைய ஏனையோர்க்கும் வழி காட்டி யிருக்கிறுர்கள். ஆகையால் இப்புண்ணிய பூமியாகிய பாரத நாடே ஞானம் பிறந்த நாடாகும். இந்த ஆன்ம ஞானத்தை அறிந்தோரே யாவு மறிந்தோர். இதைப் பெற்றோரே யாவும் பெற்றோர். இவர்கள் வேறொன்றையும் அடைய விரும்பார்கள்.

சகோதர சகோதரிகளே! இந்த ஞானத்தை யடைய முயற்சி செய்யாதவர் மானிட வர்க்கத்தைச் சேர்ந்தோராகார். அவர்கள் செய்யும் மற்ற தொழில்களெல்லாம் சேர்ந்து உணவிற்காக உழைப்பதும், உண்பதும், உறங்குவதுமாகவே முடியும். அத்தொழில்களை மிருகாதிகளும் செய்கின்றன. ஆகையால் நாம் நமது வினைப்பயன் படி எத்தொழிலைச் செய்யினும், எத்தகைய சுக துக்கங்களை யனுபவித்தாலும், "ஆன்ம ஞானத்தை யடையவேண்டும், ஆண்டவனருளைப் பெறவேண்டும்" என்ற இச்சை கொண்டு அதற்கு முயல்வதை விடலாகாது. பரப்பிரம்ம சொரூபியாம் பரமன் நம்மனைவர்க்கும் நல்லறி வளித்து அருள் புரிய வேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

---

## அன்பு.

நண்பர்காள்! மூவிருவருஷங்களாக, நம்மவர்களுக்கு, நம் இள ஆனந்தன் உழைத்து வருகின்றானென்பது யாவரும் அறிந்த விஷயம். நான் "அன்பு" என்பதைப்பற்றி எழுதவேண்டிய காரணம் என்னவென்றால் எனக்குத் தெரிந்தவைகளை நமது நண்பர்க ளனைவர்க்கும் அறிவிக்கும் பொருட்டே அன்பே வடிவெடுத்து வந்த நம் ஆனந்தனில் ஓர் சிறு வியாசம் வரையலானேன்.

அன்பென்றது ஒருவரோ டொருவரைச் சேர்க்கும் பிணைப்பு. இதுவே, உயிர்வர்க்கங்களை யெல்லாம் ஒற்றுமையோடு வாழச் செய்வது. "அன்பு" இதுதான் என்று கண்கூடாகக் காண முடியாது. இதனுடைய தன்மைகளை எவர்கள் உடைத்தா யிருக்கிறார்களோ அவர்களாலேயே அது அறியப்படும். அஃதல்லாது இக்குணம் இல்லாதவர்களாலே இதன் தன்மையும் பெருமையும் உணரப்படமாட்டாது. எம்பெருமானும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே அன்புமயமாக விளங்குகிறா ரென்றால் இதன் பெருமையை நம்மால் வரையறுக்க முடியுமா? அன்பர்காள்!

நிடத நாட்டின் அரசனுடைய கதையை அறியாதார் ஒருவரும் இருக்க மாட்டார்களென நம்புகிறேன். ஊழ்வினை அவனை யடுக்க அவன் சூதாடி அரசிழந்து, காட்டில் தன் மனைவியாகிய தமயந்தியைப் பிரிந்து, கார்க்கோடகன் என்னும் பாம்பினால் கடியுண்டு, உடலழகு இழந்து, அயோத்திசென்று, அங்கே அவ்வரசனுக்குச் சாரதியாய் வாழும் பொழுது, தன் மனைவிக்கு இரண்டாம் சுயம்வரமென்று கேள்வியுற்று, அயோத்தி அரசனோடு பீமன் நகருக்குச் சென்றானல்லவா? அப்பொழுது பலவகைக் கார

ணங்களையும் கொண்டு, அயோத்தி மன்னனுக்குச் சாரதியாக வந்தவன் தன் கணவனாக இருக்குமென்று நிச்சயித்த தமயந்தி, தான் கொண்ட கருத்து சரியோ தப்போ என்பதை அறியஎண்ணித் தாதியர்லமூமாகத் தனது மக்களை அவனிடம் அனுப்ப, தன்னை ஒருவரும் அறியாதபடி மாறுவேடம் பூண்டிருந்த நளன் தன்மக்களைக் கண்டதும், வைரத்தைப் போன்ற அவனுடைய சித்தமாகிய கதவை, இடிவிழுந்து பிளந்தாற்போன்று, பிளந்து கொண்டு அன்பு வெளிக்கிளம்பி அவனுக்குக் கண்ணீர்வரச்செய்ததன்றோ?

நேயர்களே, இதனைக் கொண்டே நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும்,

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசல் தரும்." என்று உரைத்தருளினார்.

இதைநாம் ஆராயுங்கால் அன்பு மனத்திலேயே விளைகிற தென்றும், அதனை அடைத்தற்கு ஒரு கருவியும் பயன்படா தென்றும், அன்பர்களின் இன்பத்தாலாவது துன்பத்தாலாவது உண்டாகும் கண்ணீரே உண்மை அன்பை அறிவுறுத்து மெனவும் அறியலாம்.

அன்பர்களே! ததீசி மகா முனிவருடைய வரலாற்றை அறியாதார் யாருளர்? முன்னொருகால் துவட்டாவால் அனுப்பப்பட்ட விருத்தாசுரன் இந்திரனைத் துன்புறுத்திய பொழுது பிரம்மாவின் ஏவுதலால் அவ்விந்திரன் நம் ததீசி முனிவரிடம் சென்று அவருடைய முதுகெலும்பைக் கேட்க, அப் பெரியவர் மனமகிழ்ந்து, சிவபெருமானுடைய அடிகளிலே அன்பைநாட்டி, அழியும் தன்மையை உடைய தம் நிலையற்ற உடம்பை உலகிற்குப் பயன்படும் படிக்கு விடுத்து, பேரின்பமடைந்தார். பின், இந்திரன் அவ்வெலும்பை வச்சிராயுதமாக்கி, அசுரனைக் கொன்று துன்பம் துடைத்தான். இது பற்றியே நமது திருவள்ளுவரும்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு." என்று கூறினார்.

அன்பில்லாதவர்கள் பெருமை, தன்னயம் கருதல் முதலிய தீக்குணங்கள் உடையாராக இருப்பாராதலின், மற்றையோர் செல்வத்தைத் தாங்கள் கவர்ந்துகொள்ள எண்ணுவார்கள். கொலை, களவு முதலிய பாதகத்தொழில்களுக்கும் அஞ்சார்கள். இம்மையில் கெட்டபேரையும் வருத்து மறுமையில் நரகமும் புகுவர். அன்புடையவர், தங்கள் உயிரைக் கொடுக்கவேண்டி வந்தாலும் அன்பு காரணமாகக் கொடுப்பர்.

அன்புடையீர், "அன்பில்லாத விடத்து இன்பமும் இல்லை?" என்றபடி நாம் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி வாழவேண்டும். நம்மனமாரப் பிறருக்குத் தீமைசெய்தால் நம் மனமே நம்மைச் சுடும். இதுபற்றியே நமது பெரியோரும் "தன் னெஞ்சம் தன்னைச் சுடும்" என்று கூறியுளார்.

ஆகையால் நம்மனமார யாதொரு உயிர்ப் பிராணிக்கும் நாம் தீங்குசெய்யக் கூடாது.

ஆனல் நாம் ஒவ்வொருநாளும் கண்கூடாகக் காண்பதென்னவெனின், நம்மவரில் சிலர், நாய்களின்மேலும் மற்றும் வாய்விடாப்பிராணிகளின் மேலும் கல் முதலியவற்றை எறிகிறதைப் பார்க்கிறோம். அந்தோ! அவர்களின்மேல் அக்கல் வந்துறுத்தினல் எவ்வாறிருக்குமோ? இதுபற்றியே நமது பெரியோரும் "தன் துடையை கிமிட்டினல் தெரியும்" எனக் கூறியிருக்கின்றனர். நிற்க, நம்மவரில் சிலர் குதிரைவண்டிகளின் மீது ஏறிக்கொண்டு குதிரைகளை அடித்து உதைத்து வேகமாக ஓடும்படி செய்து மகிழ்கின்றனர். பாபம்! பாபம்! பாபம்! பெரிதும் பாபம்! அது தங்களுக்கு இயற்றும் உதவியையும் மறந்தல்லவோ அப்படிச் செய்கின்றனர். இத்தகையோருக்கு இரக்க மென்னும் குணம் எங்கேதான் போயிற்ருே? ஏன் வண்டியை நிதானமாக விடக்கூடாது. இவ்வாறு நாம் ஒழுகுவோமானல் நம்மிறைவன் நமக்கு எவ்வாறு அருள் புரிவான்? ஆகையால் நாம் நல்வழியில் ஒழுக வேண்டும்.

இதனல் முத்தியில் நம்மைச் சேர்க்கும்வழி அன்பேயென்றும் அன்பல்லா மூர்க்கரை நல்வழிப்படுத்த முயலவேண்டு மென்றும் அறிகிறோம். உண்மையான அன்பு நமக்கிருந்தால் ஆண், பெண், உயர்ந்தவன், தாழ்ந்தவன், பெரியவன், சிறியவன் என்ற வித்தியாசமே இல்லாதிருக்கும். மேலும் நம் மாணிக்கவாசகப் பெருமான்

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
என் அன்பினில் விளைந்த ஆரமுதே"

என அருளிச்செய்தார்.

நிற்க உயிர்களின் மீதிருந்த அன்பினலல்லவா சிவபிரான் அன்று கடலிலிருந்து உண்டாகிய ஆலகால விஷத்தை உண்டருளினன்.
அன்புமிக்க அன்பர்காள்!

அன்பிற்கு அடைக்கும் தாள் இல்லையென்றும், அன்புடையவர்கள் தங்கள் உயிரையும் பெரிதாகக் கருதமாட்டா ரென்றும், அன்புமயமாய் விளங்குகின்ற சிவபெருமானை அடைதற்கும் அன்பையே பெருக்கவேண்டு மென்றும் அறிகிறோம். இது பற்றியே நமது ஆன்றோரும்,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே." என்று கூறினர்.

அன்பாகிய அணியின் வழியாகவே அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர், ஆழ்வார்கள் முதலியவர்கள் பரம்பொருளைக் கிட்டினர். இதுபோலவே நாமும் நம் இளை "ஆனந்தனை" ஆதரித்து, இதில் காண் கின்ற நல்லொழுக்கங்களைக் கைப்பிடித்து இம்மையில் சுகத்தையும் மறு மையில் இன்பத்தையும் அடைவோமாக.

இ. மு. அருணாசலம்
சங்கானருஞ்சங்க மானேஜர், வாணிவீதி, நடுவை நகர், இளசை.

---

## பிரபஞ்ச அநுபவம்.

நாம் கூறுகிற ஒரு உண்மையான விஷயத்தைக் கண்டு சிலர் கோபத் தை யடைவார்கள். அவர்கள் கோபிப்பதினாலேயே "அவ்விஷயம் உண்மை" என்பதை விளக்கிக் காட்டுகிறார்கள். ஆதலால் நாம் அவர்கள் மீது துவேஷங் கொள்ளாமல், அவர்களுடைய அறியாமை நீங்கு வதற்காகக் கடவுளினிடத்தில் மன்றாடவேண்டும்.

ஒவ்வொரு இரவிலும் நாம் நித்திரையை யடைய 15-நிமிஷத்திற்கு முன் "நாம் இன்று எவருக்குத் தீங்கு செய்தோம்" என்று சிந்தித்துப் பார்த்து, பிறகு கடவுளை வணங்கி, நித்திரை முடித்து, அதிகாலையில் எழுந் திருக்கும்பொழுதும் கடவுளை வணங்கியே எழுந்திருக்கவேண்டும்.

ஓயாது பேசிக்கொண்டிருப்பவன் தன்னிடத்தில் ஒன்று மில்லை யென் பதை வெளியிடுகிறான். ஆதலால், நாம் நம்மால் கூடிய வரையில் சும்மா விருக்கப் பழகி வரவேண்டும். அவ்விதம் செய்வதால் அநேக நன்மைகள் நமக்கு உண்டாவதை அநுபவமாய்க் காணலாம்.

'பகை' யென்பது பெரும்பாலும் 'சிநேகம்' என்பதிலிருந்தே உண் டாகிறது. ஆதலால், "சேரிட மறிந்து சேர்" என்ற நம் ஞானத்தாயின் திருவாய் மொழியை நாம் என்றென்றைக்கும் ஹிருதயத்தில் கொண்டிருக்க வேண்டும்.

சந்தேகத்தை யடைந்த ஒருவன் தன்னைக் கெடுத்துக் கொள்வதற்கு இவ்வுலகத்தில் வேறு சத்துருவை யுண்டாக்க வேண்டியதில்லை. அது தன்னை யடைந்தவனை எவ்விஷயத்திலும் முன்னேற வொட்டாமல் தடுக் கும். சரியான காரணத்திற்காக உழைக்கு மொருவன் சந்தேகத்தோடு ஜெயத்தை யெதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை.

இல்லறத்தை ஒழுங்காய் நடத்தும் இயல்பையுடைய மனைவியை ஒருவ னடைந்திருந்தால், அவனுக்கு இல்லறமே பெரிய நல்லறமாம்; அல் லாதவரையில், துறவறமே சாலச் சிறந்ததாமென்று பிரபஞ்ச அநுபவமும் கூறுகிறது. ஆதலால், சகோதரிகள் இவ்விஷயத்தைச் சிந்தித்துத் தமது மனதில் பதித்துக்கொள்ளப் பிரார்த்திக்கிறோம்.

புதிதாக மாமி வீட்டை யடைகிற மணமகள், தன்னுடைய சுபாவ குணங்களை யெல்லாம் ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு, அவ்வீட்டின் பழக்க வழக்கங்களை அறிந்து கொள்வதற்காகச் சுத்தமான மனதோடேயே வந்து சேருகிறு ளாதலால், அப் பெண்ணைச் சீர்திருத்த எண்ணுகிற மாமி மார்கள் முதலில் தம்மையும், தம் வீட்டாரையும் சீர்திருத்தம் பண்ணுவது சிறந்தவழி.

புதிதாக விவாஹம் செய்யக் கருதும் வாலிபனே! நீ ஒரு மாதகாலம் வரை சுகத்துடன் இருக்க விரும்பினுல், செல்வவந்தர் வீட்டுப் பெண்ணை நாடு; உன் ஆயுள் காலமெல்லாம் சுகத்துட னிருக்க விரும்பினுலோ, ஏழை வீட்டுப் பெண்ணையே தேடு. உனக்குச் சுகதுக்கங்க ளுண்டாவதற்குப் பெண்ணைப் பெற்றோர்கள் காரணமன்றிப் பெண் காரணமல்ல.

வீட்டு வேலைகளைச் செய்ய ஆள் வைக்கு மொருவன், தன் பெண்ஜாதி யின் வைத்தியத்திற்கென்று முதலில் சிறிது பொருள் எடுத்து வைத்து விட்டுப் பின்புதான் ஆள் வைக்க வேண்டுமென்று உலக அநுபவம் கூறு கிறது. ("வேலையா ளிருப்பதாலேயே வீட்டிலுள்ள மனைவி ஒருவேலையும் செய்யாமல் சோம்பலுள்ளவளா யிருக்க லாகாது" என்பது கருத்து)

சமயல் பாத்திரங்கள், தண்ணீர்ப் பாண்டங்கள் முதலியவைகளைத் திறந்து வைத்திருப்பதினுல், சில விஷ ஜந்துக்கள் விழுந்து நம் உயிருக்கே கேட்டை விளைவிக்கும். ஆதலால், சகோதரிகள் இவ்விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கை யடைய வேண்டுகிறோம்.

"கோவிந்தசாமி வருகிறுன், பாக்கியைக் கொடுத்தனுப்பு" என்ற இம்மாதிரியான தந்திகளின் விஷயத்தில் வியாபாரிகள் மிகுந்த எச்சரிக்கை யாக விருக்கவேண்டும். ஏனெனில் இவைகள் தபால்களைப் போன்ற அவ் வளவு பலமான ஆதாரவுகளல்ல.

நம் அறிவிற்குத் தோன்றுகிற ஒரு வித காரணத்தைக் கொண்டே நாம் எந்த விஷயத்தையும் முடிவு செய்துவிடலாகாது. அவ்விதம் செய்வ தால், நம் அறிவை வளரவிடாமல் அணைபோட்டுக் கொண்டவர்க ளாகின் ருேம். சிலரால் சில காரணங்களைத் தெரிந்து செய்வதே யுசிதம். கட்சிப் பிரதிகட்சிகளின் வாதங்களைக் கேட்டும் நியாயாதிபதி ஜுரிகளின் அபிப் பிராயத்தைத் தெரிந்தே ஒருவித முடிவிற்குவருகிறுர்.

தரும சிந்தையற்றவர்கள் செல்வத்தை யடைந்திருப்பதை விட வறு மையைக் கொண்டிருப்பது மிக்க நல்லது. ஏனெனில், வறுமையை யுடைய ஒருவன் தருமம் செய்யாதிருந்தால், "ஏவு, இரக்கமற்ற பாதகன்" என்று ஜனங்களிற் பெரும்பான்மையோரால் அவன் இகழப் படுவதில்லை.

ஜீவகாருண்யத்தை யடைய விரும்புகிறவர்கள், ஆரம்பத்தில் ஜீவித்துக் கொண்டிருக்கிற ஈ, எறும்பு முதலிய ஜந்துக்கள் ஜலம் முதலியவற்றில்

சிக்கிக்கொண்டால் அவற்றை மெதுவாய் எடுத்து, உலர்ந்த விடத்தில் விட்டு, அவைகள் உயிரோடு ஓடுவதைக் கண்டு ஆனந்தமடைய வேண்டும். இது நாளடைவிலேயே மாமிசம் புசித்தல், அன்னியருக்குத் தீங்குபுரிதல் ஆகிய துர்க்குணங்களை நம்மை விட்டு அகன்றுவிடச் செய்கிறது.

மதுபானம் பண்ணுவதில் பிரீதி கொண்டு தங்களுடைய ஆஸ்திகளை யெல்லா மிழந்து ஓட்டாண்டிகளான பெரும்பான்மை யோரைக் கண்டும் சிலர், "நமக்கு இவ்வறுமை ஏற்படாது" என்றெண்ணிக் கைப்பற்றி யிருப்பதும், முன்னோர்கள் தேடிய திரவியங்களை யெல்லாம் வேசிகளுக்குக் கொடுத்து, பலவித நோய்களைப் பெற்று, அந்நோய் தீர்க்கப் பொருளு மற்று வருந்துகின்ற பலரைப் பிரத்தியக்ஷமாகக் கண்டும், சிலர் "நமக்கு இத்துன்பம் வந்தணுகாது" என்றெண்ணி அவ்விஷயத்தில் பிரவேசிப்பதும், தினந்தோறும் ஆயிரக் கணக்கான மனிதர்கள் உயிர் துறப்பதை அறிந்தும், பலர் "நாம் எப்பொழுதும் ஜீவித்திருப்போம்" என்றெண்ணி நடப்பதும் இவ்வுலகத்தில் காணப்படுகிற முதன்மையான அதிசயங்கள்.

(தொடரும்.)

க. அ. பெ. விஸ்வநாதன்,
நெ. 54, தஞ்சாவூர் ரோட், திருச்சிராப்பள்ளி.

---

## மாணவர் பக்கம்.

### நாகரீகம் என்பது என்ன ?

சுமார் ஒரு நூற்றாண்டாய் இந்தியாவில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இம்மாறுதல்களால் இந்நாட்டு ஜனங்களும் நூதன நடை உடை பாவனைகளைப் பின்பற்றித் தாங்கள் நாகரீகத்தைக் கைப்பற்றுவதாய்க் கருதிக்கொள்கின்றனர். ஐரோப்பாவிலிருந்து வந்திருக்கும், தந்தித்தபால், மின்சார இயந்திரங்கள், இருப்புப்பாதை முதலியன ஜனங்களுக்கு அதிசயத்தையும், சந்தோஷத்தையும் உண்டுபண்ணி, அவர்களை மதிமயங்கச் செய்து, மேல் நாட்டார் வாழ்வே வாழ்வு, இதர வாழ்வெல்லாம் தாழ்வெனப் பாவிக்கும்படி செய்துவிடவே, இந்தியர்களும் சகல விஷயங்களிலும் அவர்களைப் போல் தங்களைப் பாவித்துப் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறார்கள். அங்ஙனம் மேல்நாட்டார் நடை உடை பாவனைகளைக் கைக்கொள்வதே நாகரீகத்தின் நோக்கமாய்க் கருதிக்கொள்கின்றனர். அந்தோ ! பரிதாபம் ! இதுவோ நாகரீகம் ! பல நூற்றாண்டுகளாய்ப் படிப் படியாய் முன்னேற்ற மடைந்திருக்கும் மனிதன் நாகரீகம் இன்னதென் றறியாதிருப்பது மிகவும் பரிதாபமே.

மனிதனிடத்தில் இயற்கையாகவே அமைந்திருக்கும் மிருகாம்சம், ஈசுவராம்சம் என்னும் இருவித அம்சங்களில், மிருகாம்ச அபிவிருத்தியினால்

ஏற்பட்டிருக்கும் தற்கால நூதன விஷயங்கள் மனிதனுக்குத் தேகாபிமானத்தைப் பெருக்கி, நிலை யில்லாததாயும் பல வியாதிகளுக் கிருப்பிடமாயும் இறந்தபின் இருந்த இடம்தெரியாது மறையப்போவதாயுமுள்ள தேகத்தை நானுவிதத்தில் சொகுசான நிலையிலே வைத்துக் கொள்ளும்படி செய்கிறது. தேகக்கூறின் சாஸ்திரத்தை நன்கு கற்று மதுபானம் தேகத்துக்கு அஹிதத்தை யுண்டுபண்ணி ஆயுளைக் குறைக்குமோர் சாதன மென்பதைத் தெரிந்தும், பல இந்தியர்கள் தங்கள் முன்னேர்களது புராதன வைதீக ஆகமங்களுக்குப் பதிலாய் இவ்வித துர் அப்பியாசங்களுக் காளா யிருப்பது வெறுக்கத் தகுந்தது. நூதனச் சண்டைகளும், சண்டையில் எளிதில் ஒருவரை யொருவர் வெட்டவும், குத்தவும் பயின்று வருவோர் நடை உடை பாவனைகளைக் கைப்பற்றுவதுதானு நாகரீகம்? இப்போதுள்ள ஐரோப்பா யுத்தத்திஞல் விளைந்திருக்கும் ப்றபல நூதன இயந்திரங்களெல்லாம், மனிதன் தன் இனத்தானையே கொல்வதற்காகத் தானே! மனிதன் மனிதனுடன் ஒத்து வாழ்வதற்குரிய மார்க்கத்தைக் கண்டுபிடித்துச் சண்டை சச்சரவின்றி வாழ்ந்தால் அது நாகரீக மாகாதோ!

மனிதன் எப்போது தனது மிருகத் தன்மை நீங்கப் பெற்று, மனிதத் தன்மையை விருத்தியடையப் பெறுகின்ருனே, அப்பொழுதுதான் மனிதன் நாகரீக முள்ளவனுவான். தனது தேசத்துக்கும், சமுதாயத்துக்கும், குலத்திற்கும், வெகுகாலம் நிலைத்து, திரிகரண சுத்தி யளிக்கத் தகுந்த வலிமையுடைய மதானுஷ்டானத்தை அனுஷ்டித்து, ஆடம்பரங்களை மறந்து, உண்மையான ஜீவியத்தைத் தெரிந்து, உடலபிமானம், உயிரபிமானம், உறவபிமானம் முதலியன விடுத்து, மதாபிமானம், மானுபிமானம், தேசாபிமானம் முதலியன அடுத்து, பரோபகாரமே ஜீவித நோக்கம், யாவரும் சேர்க்கவல்ல பரோபகாரமே ஓர் நாட்டின் பூஷணம் என்பதை யறிந்து ஒழுகும் நாடே மேன்மை பெறும்; அந்த நாட்டைத்தான் நாகரீக முள்ளதென்று சொல்லலாம். அந்நாடே யாவருக்கும் கற்பிக்கத் தகுந்ததோர் நன்னடகமாகும்; எவரும் போற்றிப் புகழும் பொன்னடகம். அங்ஙனமிருந்த இந்தியாவானது இப்போதடைந்திருக்கும் பரிதாப நிலையினின்றும் கரையேறுதற்பொருட்டு வேண்டிய முயற்சிகளைப் போதனுமுறையில் செய்யும் நம் "ஆனந்தபோதினி" என்னும் பத்திரிகைக்கு நாம் நன்றியுள்ளவர்களா யிருப்பதுடன், அது போதிப்பது போல் ஒழுகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

என். சுப்பிரமணிய அய்யர்,
கிழக்கு ரதவீதி, நாகர் கோவில்.

---

## நீந்துப் பயிற்சி.

இந்தியாபோன்ற உஷ்ணப் பிரதேசங்களில் வருஷம் முழுவதும் வெளியில் சென்று ஸ்நானஞ்செய்வது சுலபமே. ஆனல் இங்கிலாந்து முத

வியதேசங்களிலோ ஜலம் வேனிற் காலத்தில் மாத்திரமே ஸ்நானம் புண்ணவேண்டு மளவு வெப்பமுன்ளதாக இருக்கிறது. ஆயின் இந்தியாவில் நீந்த விரும்புகிறவர்களுக்கு ஒரு பெருங்கஷ்டம் இருக்கின்றது. இந்தியாவைச் சுற்றிலுமுள்ள கடலில் நீராட நினைத்துச் செல்பவர்களுக்கு, அக்கடலில் இருக்கும் சுறுமீன் முதலியவைகளால் ஊறு உண்டாகிறது. கங்கை கோதாவரி முதலிய பெரிய நதிகளில் முதலை முதலிய பலவிதமான நீர்வாழ் ஜந்துக்கள் நிறைந்திருப்பதினுல் அவைகளில் அச்சமின்றி ஸ்நானம் செய்வது ஆபத்துக்கிடமாக விருக்கிறது. சிற்சில சிறிய ஆறுகளிலும் குளங்களிலும் நீராடுங்கால் விஷசர்ப்பங்களால் தீண்டப்பெற்று இறப்பவர்களு முண்டு. இவ்வித கஷ்டங்கள் இருப்பதனுல் இந்தியக்கடலிலும், மற்றுமுள்ள நீர் நிலைகளிலும் நீராடுதல் சில வேளைகளில் உயிருக்கு அபாயத்தை விளைவிப்பதாக விருக்கின்றது. ஆகையால் நீராடுவோர் உவர்நீரி லுள்ள சுரு முதலிய வற்ருலும், நன்னீரிலுள்ள சர்ப்பவகைகளாலும் யாதொரு அபாயமும் உண்டாகா வண்ணம் தங்களைக் காத்தல் இன்றியமையாத தாக இருக்கிறது.

இவ்விதம் நீர் நிலைகளிலுள்ள பிராணிகளால் பிராணுபாயம் நேர்தலைக் கருதியும், மிதமிஞ்சி நீந்தினுல் கைகால் ஓய்ந்து அதனுலும் மரணம் உண்டாதலைக் குறித்தும், பருகுதற்கான நன்னீர் நிலைகளில் நீந்தினுல் அவை கலக்கமுற்றுப் பானத்துக்கு உபயோகப் படாமல் இருப்பது பற்றியும், "நீர் விளையாடேல்" என்று ஔவையார் தமது ஆத்திசூடியில் கூறினுர்போலும்.

நீத்துப் பயிற்சி என்பது எல்லோரும் விரும்பத்தக்கதோர் அரியவித்தை ஆனபடியால், ஒவ்வொரு ஊரிலும் எல்லாரும் அதனை நன்கறியும் வண்ணம் முயற்சி எடுத்துக் கொள்ளுதல் மிகவும் உசிதமானது. கஷ்டப்பட்டு வேலைசெய்து அயர்ச்சியுற்றவர்கள் நீரில் நன்ருக நீந்துவதனுல் அச்சோர்வு நீங்கப் பெறுகின்றனர். அன்றியும் நரம்புப் பிறழ்ச்சி, இரத்தங் கட்டிக் கொள்ளுதல், கைகால் முதலிய உறுப்புக்களில் நோய் முதலியன நீங்கிவிடுகின்றன; நரம்புகள் தத்தம் நிலைமையை அடைகின்றன. நீந்துவதனுல் தேகத்தில் இரத்தவோட்டம் செழிக்கின்றது. முக்கியமாக நீந்துதல் மனதில் உற்சாகத்தை உண்டாக்கக் கூடிய ஒரு சிறந்தபயிற்சி. வெயிற்காலத்தில், வெளியேபோய்த் தேகப்பயிற்சி செய்வதற்கு இயலாத காலத்தில் நீந்துவதே நல்லது. ஒருவன் உஷ்ணம் மிகுதியாக இருக்கும்படியான ஓர் நாளில் காலையிலாவது, தான் செய்யவேண்டிய வேலையைச் செய்தபின்னராகிலும் ஸ்நானம் செய்தால் மனதுக்கு எவ்வளவோ இரம்மியத்தையும், மகிழ்ச்சியையும் செய்கிறது. ஆனுல் நீந்துவதைச் சந்தோஷம் தரத்தக்க பயிற்சி என்று மாத்திரம் கருதுதல் ஒண்ணுது. அது தேஹ ஆரோக்யத்திற்கும் சிறந்த அனுகூலத்தை யளிக்கத்தக்கது. சமுத்திர ஸ்நானஞ் செய்வதால் உண்டாகும் குணங்களை எல்லோரும் நன்கறிவார்கள். பல மில்லாதவர்

அல்லது துர்ப்பல முற்றவர் கடற்கரைக்குச் சென்றால் அதனால் உண்டா கும் குணங்களால் சுகம் பெறுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

நீந்தக் கற்றிருந்தால் சமயத்தில் பிராணாபாயத்தினின்றும் நாம் தப்புவ தோடு பிறரையும் காப்பாற்றலாம். எப்படி எனில், ஒருவர் கால்வழுக்கிப் பூரணபிரவாகமாக இருக்கும் பொழுது ஆற்றில் விழுந்தால் நீந்தத் தெரிந் தவர் அருகில் இருந்தால் அவரைமீட்கலாம். உயிர்ப் பிட்சை தருவது சிறந்த தருமமல்லவோ. ஆங்கிலேயச் சிறுவர்கள் சிறுமிகளைக் காப்பாற்றியதற்காகப் பரிசுகள் பெற்றிருப்பதாகக் கேள்விப் படுகிறோம்.

நீத்துப் பயிற்சியின் குணங்களை ஆங்கிலேயர் நன்கறிந்தவ ராகையால் தங்கள் ஊரில் ஆங்காங்கு நீச்சுத்தொட்டிகள் அமைத்திருக் கின்றார்கள். நம் நாட்டுச் சிறுவர்கள் ஒவ்வொருவர்க்கும் நீந்தக் கற்பிப்பது அவசிய மாகும்.

R. ராமனாதன், திருவாடி, தஞ்சாவூர்.

---

## தமிழர் புராதனம்.

(27-ம் பக்கத்தொடர்ச்சி)

எனினும் நச்சினார்க்கினிய ருரைப்படி தமிழ் என்ற சொற்கு இனிமை யெனப் பெறும். இப்பொருட்குத் 'தமி' என்பது பகுதி யென்பார் * ஸ்ரீமான் கனகசுந்தரம் பிள்ளை யவர்கள். (தமி - ஒப்பின்மை.)

இனிச் சிலர் தமிழென்பது திராவிட மென்னும் சமஸ்கிருதத்தின் பெயர்ப்பு என்ப. பாவை வழக்கில் தமிழும் திராவிடமும் ஒன்றுக்கொன்று பொருளதாக வழங்கப்படினும், எவ்வணம் திரவிடம் தமிழெனப் பட் டதோ அறிகிலோம். திராவிடம் என்னுஞ் சொல் தமிழெல்லைக்கும், பஞ்ச திராவிடருக்கும், திராவிட பூமியின் வாசிக்கும் பெயராக வழங்கப்படுகின் றது. பஞ்ச திராவிடர் என்பவர் வடநாட்டு அந்தணரினும் ஆசார வொழு க்க மிகுந்துள்ள தென்னாட்டுத் (திராவிட) அந்தணராவர். ஆனால் திராவிட பூமி என்பது எது? அதன் எல்லை யெதுவரை? இவைகளின் உத்தரமே நம் மொழியின் தொன்மைக் காதாரவாகும். மேலுந் தெலுங்கர், தமிழ் நாட்டு அந்தணரைத் "திராவுட்லு" என்றும், ஸ்ரீ சங்கராச்சாரியர் மறை நவில் சம்பந்தரைத் " திரவிட சிசு " என்றுங் † கூறுவதை யொப்ப நோக் கின் திராவிட மென்பது தென்னாட்டினரைக் குறிப்பதுடன் தமிழ் என்ப தன் வடமொழிப் பிரதி பதம் ‡ என்ன வேண்டும். உற்றுநோக்கின் தமிழினின்றும் பிரிந்த மலையாள முதலிய பாகத பாஷைகளையே குறிக்கும்.

---

* 'Tamils Eighteen Hundred Years Ago.'

† " தயாவத்யா தந்த்தம் த்ராவிட சிசு "—சௌந்தரியலகரி—76

‡ இவ்விதமாக வடமொழியாளர் செய்வதற் குதாரணமாக ஆர்க்

காடு என்பதை அறுகாடு எனத் திரித்து ஷடாரண்யமென மொழி பெயர்த்து அந்த ஸ்தலத்துக்குப் புராணமெழுதி யுள்ளதைக் காட்டலாம்.

மொழி நூல்களிற் பஞ்ச திராவிடம் என்னுஞ் சொல் திராவிடம், கன்னடம், ஆந்தரம், மாராடம், கூர்ச்சரம் என்னும் பாஷைகளையே குறிக்கும். இவையிற்றில் திராவிடம் தமிழல்லவெனின் மலையாளத்தையே குறிக்கின்றது. இவ்வைந்து பாகதங்களும், துளுவு, காண்ட் என்னும் பாஷைகளும் தமிழினின்றும் பகுபட்டன. இதனையே யாசிரியர் சுந்தரம் பிள்ளை.

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோ
ரெல்லையறு பரம்பொருண்முன் னிருந்தபடி யிருப்பதுபோற்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவு
முன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினு
மாரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே"

என்று குறித்தார்.

தொல்காப்பியத்துக்குச் சிறப்புப் பாயிரங் கூறிய பனம் பாரனார்,

வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து"

என்று கூறுதலானும், கீழ்மேற்றிசை யெல்லை கூறாமல் விடுத்தலானும், தமிழ் நாட்டெல்லை முப்புறமுங் கடல்வரை யென்று நன்கு புலப்படும். அங்ஙனமாயின் மலையாள பாஷையின் எல்லை இத்தமிழ் நாட்டிற்குள்ளே யடங்குவதுடன் அம்மொழியும் தமிழினின்றே யுதித்திருத்தல் வேண்டும்.

சோழனொருவன் கடற்போக்கு வியாபாரத்தி னிமித்தம், கீழ்க்கடலினுயர்ந்திருந்ததோர் பூசந்தியை வெட்டி யெடுப்ப, மேற்கடனீர் கீழ்க்கடனுக்க முழுகியிருந்த நிலம் மலையாளமென்னும் பெயர் பெற்றுப் பரசுராமர் காலத்தில் தமிழர் அங்குக் குடியேறின ரென்று கர்ண பரம்பரையாக வொரு வழக்குண்டு. அதற்கு மலையாளம், 'மலைக்கடற் பூமி, (ஆளம்-ஆலம்-கடல்) மேற்கடற்கரைச் சார்புள்ளது என்று பொருள்படும். இஃது அவ்வளவு பொருத்தமானதாகத் தோற்றவில்லை. ஆளம் என்பது ஆள் (உடைமை) என்னும் பகுதியினின்றும் கொண்டு, வெள்ளாளன், வெள்ளாண்மை போல மலையுடைமை என்று பொருள் கோடல் சிறப்பாகும். மலையை யுடைய பிரதேசம் என்று கொள்க.

மலையாளத்துத் தல, தா, இல, வல, பல்க முதலிய அகரவீற்றுச் சொற்கள், தமிழின் முற்பட்ட நிலைமையின் சொற்றிரிபுகளாம், பின்னர் நாவின் முதிர்ச்சியால் அவை ஐகார வீறுதிரிந்தன; இதனானும் அனுபவத்

தானும் உணர்க. மலையாளம் ஆரியத்தைப்போன்று பால்வினை முடிபு பெறுமல் நின்றது. இதனையே போலும் நன்னூலார்,

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே"

எனப் புதியதாகப் புகுத்தனர். நிற்க, இதனுனும், இன்னும் பிறவானும், மலையாளம் வேண்டியவரை தமிழினின்றும் மாறுபட்டு வடமொழியுடன் உறழ்ந்து தற்போழ்திய நிலைமைக்கு வந்துளது என வறியலாம்.

கிழக்கு மேற்கு என்னும் திசைப்பெயர்கள் தமிழிலும் மலையாளத் திலுங் காணப்படுகின்றன. தமிழ் நாட்டுக்குக் கிழக்கு கடற்றிசையாய் 'கீழ்த் திசையாம்'; மேற்கு, மலைப்பிரதேசமாய் மேல் திசையாம். அதனுல் தமிழில் இப்பெயர்கள் நன்கு பொருள்படப் பொருந்தும். ஆனல் மலையாளத்தில் கடற்றிசை (கீழ்த்திசை) மேற்காகவும், மேல்திசை (மலைநாடு) கிழக்காகவும் வழங்கப்படுகின்றன. இதுவே தமிழின் முதன்மையும் மேன்மையும் நன்கு விளக்கும்.

மலையாளத்தின் முதற் காவியமாய ராமசரிதம் தமிழ்ப் போக்கே பற்றிச் செல்கின்றது! ஆனல் நாட்பட நாட்பட ஆரிய சம்பந்தப்பட்டு வடமொழி அதிகமாகப் பயின்று ஏறக்குறைய நானூறுண்டுகட்கு முன்னர் எழுத்தச்சன் என்பானல் மிக்க திருத்தப் பாடு அடைந்தது. அதன் பின்னர் இலக்கணம் வகுக்கப் புகுந்தார் வடமொழியையே பின்பற்றினர்.

இனி ஆந்திர மென்னுந் தெலுங்கு மொழியைச் சிறிது கவனிப்பாம். *. தர்க்க சாஸ்திரியாய, குமாரில பத்தர் திரவிடநாட்டை ஆந்த்ர-த்ராவிட பாஷாதேச:" என்பர். அதனுல் அக்காலத்தவர், தெலுங்கும் தமிழும் ஒரு தன்மையதென்றே, ஒற்றுமைப்பட்டதென்றே கொண்டனர். தெலுங்கு என்னும் பதம் பொதுவாகத் 'திரிலிங்கம்' என்று கூறப்படும். அத்தேயத்தின் எல்லையில் மூன்று சிவலிங்க ஸ்தலங்கள் உள்ளதாகக் கூறுவர். எனினும், தமிழ் மக்கள் அவர்களை, 'வடுகர்' என்பது சிறப்பாகும் (வடக்கு தேசத்தவர்). ஆனல் ஆந்திரர் தெலுங்கு என்பதன் திரி பென்றும், தேனைப் போலினியதென்றும் கூறுவர். இவ்விதமாகத் திரித்துரைத்தது தமிழின் பொருளை யுன்னியே போலும். ஆயினும், தெலுங்கு மொழி பேசுவதற்கும் பாடுவதற்கும் மிகவும் இனிமைவாய்ந்ததென்று அனைவரும் ஒத்துக்கொள்வார்கள்.

எனினும், ஆந்திரமும் தமிழினின்றே பிரிந்தது. ஆரியத்துடன் மிகவும் பயின்று, அதன் இலக்கணத்தையும் பொருளையும் பெரும்பாலும் கொண்டு விளங்குவதால் அதற்குந் தமிழுக்குந் தோன்றும் ஒரு சிறிது ஒற்றுமையும் அறவே மறைகின்றது. தமிழ் மொழி வரிவடிவின் இளம் பிராயத்தேயே தெலுங்கு தனிமொழியாகப் பிரிந்திருத்தல் வேண்டும்.

தென்னாட்டு மொழிகளில் முதன் முதல் வடமொழி யொடு மிகவும் கலந்தது தெலுங்கே; அஃதே வட நாட்டிற் கருகிலிருந்தது.

தமிழ்நாடு செந்தமிழ் கொடுந்தமிழ் நாடு என இருவகைப்படும். சேனாவரையர்,

> "செந்தமிழ்ச் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
> தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி"

என்ற சொல்லதிகாரச் சூத்திரத்துக்குப் "† பன்னிரு நிலமாவன—பொங்கர் நாடு, ஒளி நாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சித நாடு, பூழி நாடு, ‡ மலை நாடு, அருவா நாடு, அருவா வடதலை" என விசேஷ வுரை கூறியுள்ளார்.

எனவே, செந்தமிழ் நாட்டைச் சார்ந்த கொடுந்தமிழ் நாடுகளை யடுத்துத் தமிழ் மொழியின் பாகத மொழிகளினோடு பரவியிருந்தன. தெலுங்கு மொழியும், அருவா நாட்டை யடுத்திருந்ததுந் தெளிவுறும். இவ்வருவா நாட்டின் (கொடுந்) தமிழினின்றே தெலுங்கு பிறந்தது. இதுபற்றியும், வடுகமொழி (வடக்கர்மொழி - தெலுங்கு) பாஷா சம்பந்தத்தால் திருத்தப் பாடுற்றதைப் பற்றியும் போலும்,

> "தெலுகு தேட்ட அரவம் அத்வானம்"

என்ற பழமொழி யுண்டாயது. அரவம் என்பது அருவாநாட்டுக் கொடுந் தமிழை.

இனித்தமிழ் மொழியிலும் ஆந்திர பாஷையிலும் உள்ள ஒற்றுமையும் அதனால் பின்னையது தமிழினின்றும் போந்த தென்பதற் காதாரமுங் காட்டுவாம்,

| தமிழ். | தெலுங்கு. |
|---|---|
| தலை | தல |
| கண் | கன்னு |
| மூக்கு | முக்கு |
| செவி | செவ்வு |
| நா | நாலுக |
| மருந்து | மந்து |
| செய் (வினை) | செய் (வினையின் ஆகு பெயராய்க் காத்தைக் குறிக்கும்.) |

(தொடரும்)

து. தீனதயாளு.

---

56-வது பக்கம் * Caldwell's Philalogy P. 27.

† செந்தமிழ் நிலமாவன—வைகையாற்றின் வடக்கும், மருத யாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும் உள்ளது.

‡ இதுவே மலையாளமென்னும் கேரள நாடு.

[கொடுந்தமிழ் என்பது, மேற்கூறிய செந்தமிழைச் சூழ்ந்த (வளைந்த) பன்னிரு நிலத்தில் வழங்கும் மொழி என்ப. கொடுமை—வளைவு, சூழ்தல். "குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்' என்ற நாலடியாரும் அப்பொருளே. கம்பர் முதலிய செந்தமிழ் வாணர் பயிலும் இயலிசை நாடகமாய செந்தமிழ்க்கு மாறாய பாமரர் வழங்கும் மொழி என்றுங் கூறுவார்.]

## கைவல்லிய நவநீத வசனம்.

(22-ம் பக்கத்தொடர்ச்சி)

### (மாயையின் சொருபத்தைப்பற்றிய வினுதல்)

**சீடன்:**—"மாயையென்ற கரிய மேகங்களை யோட்டவல்ல சண்டமாருதம் போன்ற குருசுவாமிகளே! (1) மாயை யென்பது எப்படிப்பட்டது? (2) அதை யுடையோர் யார்? (3) அதன் உற்பத்தி எப்படி? (4) அது என்வந்தது? (5) மாயை யென்பது பிரம்மத்தினும் வேருகிய ஒரு பொருளெனின், ஏகம் என்பதின்றி இரண்டுபொருள்கள் உளவென்ருமே. (6) மாயையும் பிரம்மமும் ஒன்றெனின், பிரம்மமும் மாயையைப்போல் பொய்யாகுமே. இச்சந்தேகங்களை நிவர்த்தி செய்யப் பிரார்த்திக்கிறேன்" என்ருன்.

**ஆசான்:**— (1) மாயை யிப்படிப்பட்டதென்று கூறமுடியாததால் அது அவாச்சிய வடிவாகும். அதாவது வார்த்தைகளால் விளக்கிக்காட்ட முடியாதது. அநிர்வசநீயம் எனினும் அதேபொருள்.

(2) யார், நான் எனது என்ற பற்றுடையோராய், தேகமே நாம் என்ற அபிமான முடையோராய், பிரபஞ்சம் மெய்யென்ற மயக்கமுடையோரா யிருக்கிருர்களோ அவர்களே மாயையை யுடையோர்.

(3) இத்தன்மையான தென்று வாக்கால் கூற முடியாத அம்மாயை இன்னவிதமாக உண்டாயிற்றென்று கண்டவர் ஒருவருமில்லை.

(4) விசனகாமான அம்மாயை என் வந்ததென்ருல், "நாமார்? இவ்வுலகம் யாது? இது வந்தவாறெங்கன்?" என்ற விசாரணை யில்லாததால்.

இந்தமாயை தோற்றப்படாதது. ஓர் இந்திரஜாலக்காரனுடைய மணி மந்திரூபமான சத்தி அருவமானதால் தோற்றப் படுவதில்லை. அவன் விளையாடியபின் அச்சத்தியின் காரியமாகத் தோன்றும் நாமரூபமான நகரங்கள், ஜனங்கள், மிருகங்கள் முதலியவற்றைக் காண்பதாலேயே அவனுடைய மந்திரசத்தியை யுணர்கிருேம். அவன் விளையாடுவதற்குமுன்பு அது தோற்றப் படுவதில்லை. இவ்வாறே பிரம்மத்தின் கண் எண்ணிறந்த சத்திகளுள; அவற்றை யொருவரும் கண்டறியக் கூடாது. எங்கும் விரிந்துள்ள பிரபஞ்சத்தைக் கண்டே அநுமானத்தால் அச் சத்திகளை யுணர்கின்ருேம்.

(5) இந்திரஜாலங் காட்டும் மாந்திரீகனைத்தவிர அவன் சத்தி வேருனதல்ல. அது போல் மாயை பிரம்மத்திற்கு வேருயில்லை. மாயை பிரம்மத்தின் வேறெனின் வஸ்துவும் ஏகம் என்பதின்றி இரண்டாகுமே என்ற சந்தேகத்தை யொழிப்பாயாக.

(6) இந்திரஜாலக் காரனுடைய ஜாலவித்தை பொய்யாய்ப் போக அதைக்காட்டும் மாந்திரீகன் மட்டும் மெய்யாக விருப்பதுபோல, மாயையும்

மாயா காரியங்களும் பொய்யாய்ப்போகப் பிரம்மம் மட்டும் உண்மையாக வுள்ளதென் றறியவேண்டும். ஆகையால் மாயை பிரம்மத்தைவிட வேறல்ல வென்றும், ஒன்ரு யிருப்பினும் பிரம்மம் மாயையைப்போல் பொய்யாகாமல் மெய்யாகவே யுள்ளதென்று மறிந்து,பிரம்மமும் மாயையும் ஒன்றெனின் மாயையைப்போல் பிரம்மமும் பொய்யாகுமே என்ற ஐயத்தை யகற்றுவாயாக.

[மாயை, அவித்தை, ஆவரணம், விக்ஷேபம், அஞ்ஞானம், சத்தி, பிரகிருதி என்ற எல்லா வார்த்தைகளும் ஒன்றையே குறிக்கும். மாயையின் தொழிலிலுள்ள பலவகைகளால் அதற்கு அவ்வாறு பல பெயர்கள் வந்தன. இதனுல்தான் எண்ணிறந்த சத்திகளென்றது. மாயை உற்பத்தியில்லாததால் அநாதியாகும். மாயை முக்கியமாக ஆவரணம் விக்ஷேபம் (மறைப்பு, தோற்றம்) என்ற இருபகுதியா யுள்ளது எனலாம். மாயா காரியமாகிய இப்பிரபஞ்சம் எப்போதுண்டாயிற்றென்று கூறமுடியா தாதலின் அநாதி. இப்பிரபஞ்சமாகிய மாயையின் தோற்றம், கானல் நீர் பொய்யென் றுணர்ந்த பின்பும் தோன்றிக்கொண்டே யிருப்பதுபோல், இருந்துகொண்டே யிருக்கும், அதனுல் மாயையும் பிரம்மத்தைப்போல் நித்தியமே என்பர் ஓர் சாரார். ஆனுல் சிவன் சம்பந்தப்பட்ட வரையில் இம்மாயை யழிக்கக் கூடியதேயாகும். அனுபவமாக மாயையை வென்றேரே ஞானத்தை யடைவார்கள். ஆகையால் அச்சந்தர்ப்பத்தில் மாயை அநித்தியமே. அதாவது என்று பிரம்மம் உண்டோ அன்றே மாயையுமுண்டு. பிரம்மம் உள்ள மட்டும் மாயைக்கு அழிவில்லை. அஞ்ஞான நிலையிலுள்ளோர்க்கு மாயை நித்தியமாகவே தோன்றும். தன்னை யறிந்த ஞானி மாயை பொய்யென் றுணர்வான்.

இன்ன விதமானதென்று அறியப்படாத இம்மாயை அனுபவத்தில் மனதை யன்றி யன்னியமாக இல்லை யெனலாம். உண்மையில் "யாதொன்றில்லாதது அது மாயை யாகும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

"மாயை யெனுமிவ் வுரைக்கருத்த மதிக்கின் யாதொன் றிலாததுவே
மாயை யெனவிப் படியிருக்க மதிப்ப ரதனை யிருவகையாய்
மாயை மெய்யென் றுரைத்திடுவர் மயக்கப் பட்டுத் தனைமறந்தோர்
மாயை பொய்யென் றுரைத்திடுவர் மயக்க நீங்கித் தனையறிந்தோர்"

(ஸ்ரீ குமாரதேவர் - அத்துவித உண்மை.)

நமது நிஜ சொரூபத்தை நாம் மறந்ததே மாயை யாகும். மறைப்பு என்ற ஒன்று இருக்கிற வரையில் நினைப்பு என்பதும் உண்டு. இந்த மறைப்பு நினைப்பு என்ற இரண்டும் மனதின் தொழிலாக விருக்கின்றன. ஆதலின் மனமே மாயை யாகும்.

“ மனமன மெங்குண்டு மாயையு மங்குண்டு
மனமன மெங்கில்லை மாயையு மங்கில்லை
மனமாயை யன்றி மற்றொன்று மில்லை
பிளையர்ய வேண்டாம் பிதற்றவும் வேண்டாம்
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே.”

என்றனர் ஆன்றோர். (பாடுதுறை.)

“ இறப்பும் பிறப்பும் பொருந்த - எனக்
கெவ்வணம் வந்ததென் றெண்ணிநான் பார்க்கில்
நினைப்பு மறப்புமாய் வந்த - வஞ்ச
மாயா மனத்தால் வளர்ந்தது தோழி - சங்கர.”

என்றனர் மெய்ஞ்ஞானச் செல்வராகிய நமது தாயுமான சுவாமிகள்.

இம்மனதின் உருவ நாசம் சீவன் முத்தியிலும், அருவ நாசம் விதேக முத்தியிலும் சித்திப்பதால் மாயை யழிக்கக் கூடியதே. இதனால் மாயை அநாதி, ஆனால் அநித்தியம் - பிரம்மம் அநாதி நித்தியம், என்பதே அனுபவம்.

இப்பிரபஞ்சம் முழுமையும் மாயா சொரூபமே. நாமரூபத்தை யன்றிப் பிரபஞ்சத் தோற்றமில்லை. நாமரூப நாட்டம் விடின் மாயை யொழிந்ததாகும். மனமும் மாயையே யாதலானும், மனதிற்கு நாமரூபத்திலேயே பற்றுதலானும் மனமும் ஒழிந்ததாகும். அப்போது ஆன்ம சொரூபம் தோன்றும்.

பிரபஞ்சத் தோற்றமாகிய மாயையால் நமக்கு ஒரு கெடுதியு மில்லை. அதை மெய்யென்று எண்ணும் அஞ்ஞானமாகிய மாயையே நமக்கு இப்பந்தத்தை யுண்டாக்கி யிருக்கின்றது. அதிட்டானமாகிய கயிறு தோன்று மட்டுமே ஆரோபமாகிய பாம்பு மெய்யாகத் தோன்றும். கயிறு தோன்றியதே ஆரோபமாகிய பாம்பு பொய்யென்று விளங்கிவிடும். அதுபோல், தன் நிஜ சொரூபத்தை யறிந்தபோது, இப்பொய்ம் மாயை யில்லை யென்று இயல்பாகவே தோன்றும். அப்போது பிரபஞ்சத் தோற்றமும் பொய்த் தோற்றமென்று விளங்கிவிடும். ஜக, ஜீவ, பரம் என்ற மூன்று பகுப்புகள் ஒழிந்து எல்லாம் ஏக சொரூபமாகவே விளங்கும்.]

(குரு இச்சத்தியின் இருப்பைப்பற்றி இன்னும் கூறுகிறார்.)

இத்தகைய அநிர்வசநீயப் பொருளாகிய இம்மாயை இருக்கிறதென்று எப்படிக்கூறுவது என்று கேட்பாயேல், அசேதனமாகிய புல், பூண்டு, செடி முதலியவை யனைத்தும் வளர்வதும், பூர்க்கும் காலத்தில் பூர்ப்பதும், காய்க்கும் காலத்தில் காய்ப்பதும், பழுத்து உதிருங் காலத்தில் உதிர்வதும், முட்டைக்குள் இருந்து உற்பத்தியாகும் குஞ்சு பல நிறங்களை யுடைத்தா யிருப்

பதுமாகிய பெரிய அதிசயத்தைப் பார். இவற்றிற்குள் பிரம்மத்தின் சிற்சத்தி யில்லாவிடில் சராசரப் பொருள்களின் சுபர்வங்க ளனைத்தும் தலைகீழாக மாறிவிடும்.

(சீடன் மாயையின் நிவர்த்தியைப்பற்றி வினவுதல்.)

சீடன்.—ஒருவராலும் அறியக் கூடாததும், இன்ன விதமானதென்று சொல்ல முடியாததும் நாமரூபப் பிரபஞ்சமாகிய இப்பயிருக்கு ஓர் வித்துப் போன்றதும் என்று தாங்கள் கூறிய இம்மாயையை நிவர்த்தி செய்யும் மார்க்கம் எது?

அது நிவர்த்திக்கக் கூடாதெனில் பிரம்மத்தை ஏக சொரூபமாகப் பாவிப்ப தெப்படி? முத்தி கூடுவ தெப்படி? இவற்றைக் கிருபையோ டருள் புரியப் பிரார்த்திக்கிறேன்.

குரு:—குழந்தாய்! மணிமந்திர ஔஷதங்களால் வாயுத் தம்பனம், ஜலத் தம்பனம், அக்கினித் தம்பனம் செய்யும்போது வாயு, ஜலம், அக்னி இவற்றிலுள்ள சலனம், திரவத்தன்மை, உஷ்ணம் ஆகிய இச்சத்திகள் மறைந்து போகின்றனவன்றோ. அது போலவே நீ ஏகாக்கிர சித்தத்தோடு பிரம்மம் மாத்திரமாக நின்று வேறொன்றையும் நினையாதிருப்பாயேல் அம்மாயையாகிய சத்தி மறுபடி தோன்றாது ஒழிந்து போம். இதைத் தவிர இதற்கு வேறே மந்திர மொன்றும் சுருதிகளில் கூறப்பட் டிருக்கவில்லை.

சாதாரணமான மண்ணில் குலாலன் தண்டச் சக்கரத்தைக் கொண்டு ஒரு குடத்தை யுண்டாக்குகிறான். அங்கிருப்பது மண்ணே யாயினும் அதற் குண்டாயிருக்கும் உருவத்தினாலேயே யதைக் குடம் என்கிறோம். குயவன் சக்கரத்தைக் கொண்டு தன் கிரியைச் செய்வதற்குமுன், அம்மண்ணில் மறைந்திருந்த சத்தியே, குயவன் செய்கைக்குப் பின் அந்த நாமரூபமாகிய காரியமாக வெளிப்பட்டது. மண்ணைத் தவிரக் குடமில்லை யாதலின் மண்ணையே குடம் என்கிறோம். அக்குடம் உடைந்துபோனால் (அதாவது நாமரூபம் நசித்தால்) மறுபடி மண் என்கிறோம். குடம் என்பது வாய்ச் சொல் மாத்திரமே.

குடம் உண்டாவதற்கு முன்னிருந்தது மண்ணே; உண்டானபோது குடமாகத் தோன்றுவதும் மண்ணே. குடம் அழிந்தபின் இருப்பதும் மண்ணே. இதனால் முக்காலத்தும் இருப்பது காரணமாகிய மண்ணே. காரியமாகிய குடம் என்பது நம் வாயால் கூறப்பட்டு மறுபடி மறைந்து போயிற்று. குலாலனுடைய தொழிலுக்கு முன் குடமில்லை. குடமுடைந்த பின்னும் குடமில்லை. குடம் என்பது இடையில் தோன்றி மறைந்தது. ஆகையால் காரணமாகிய மண்ணே சத்தியம். காரியமாகிய

குடம் நிலையற்ற பொய்யே. இடையில் தோன்றிய காரியமாகிய குடமாக அதைப் பார்ப்பதை விட்டு, முக்காலத்துமுள்ள மண்ணாகவே காண்பதுதான் சத்தியம். இவ்வாறே தாட்டாந்தத்தில்,

மாயாகாரிய மாகிய நாமரூபப் பிரபஞ்சம்பொய், வாக்குமாத்திரமே யாகும் மாயைக் காதாரமாகிய பிரம்ம சொரூபம் ஒன்றே சத்தியமாகவுள்ளது. ஆகையால் மாயா கற்பிதமாகிய நாமரூபத்தோற்றமனைத்தும் பொய்யே யென்று மறந்து, சின்மயவடிவான பிரம்மசொரூப மாத்திரமாய் இருப்பாயாயின் மாயை யொழிந்துபோம்.

[மேலே குமாரதேவர் கூறியதாக நாம் கூறியுள்ள "நாமரூப நாட்டம் விடின் நமது சொரூபம் தோன்றியிடும்" என்ற வாக்கியம் ஈண்டு சிந்திக்கத்தக்கது. இருள் நீங்கினல் வெளிச்சம் தோன்றியதாகும்; வெளிச்சம் தோன்றியதெனின் இருள் நீங்கியதாகும். நாமரூபநாட்டம் விடின் சொரூபம் தோன்றும்; சொரூபமாத்திரமாக நிற்பின் நாமரூபத்தோற்ற மொழியும்.

இருப்பது மண்ணும் குடமும். ஆனல் உண்மையில் இரண்டு பொருளில்லை; மண்ணே குடமாகத் தோன்றுகிறது. 'குடம்' என்பது சொல் மாத்திரமேயாகும். நாம் "குடம் அழகாக விருக்கிறது, பெரிதாக விருக்கிறது, இலேசாக விருக்கிறது" என்று விவகரிக்கும் போது மண் என்பதை மறந்து பேசுகிறோம். மண் என்பதைப்பற்றியே கவனிக்கும்போது "இது நல்ல மெழுகுபோன்ற சிவப்பு மண், கற்கள் கலப்பில்லாதது" என்று கூறுகிறோம். அப்போது குடம் என்ற உணர்ச்சியே யில்லை. ஒன்றே மற்றொன்றாய்த் தோன்றுவதால் எதை நோக்குகிறோமோ அதுமட்டுமே தோன்ற மற்றொன்று மறையும்.

தாஷ்டாந்தத்திலும், உள்ளது நாமரூபமும், சச்சிதானந்த மயமாகிய பிரம்மமுமே. உண்மையில் இரண்டில்லை. பிரம்மசொரூபம் ஒன்றேயுள்ளது. அதுவே நாமரூபப் பிரபஞ்சமாகத் தோன்றுகிறது. பிரம்மமே மண்போல் முக்காலத்து முள்ள சத்தியப்பொருள், பிரபஞ்சம் குடம்போல் பொய். பிரம்மசொரூபமே நாமரூபமாகத் தோன்றுவதால் நாமரூப நாட்டத்தை விடின் பிரம்மசொரூபமே தோன்றும், அல்லது பிரம்மசொரூப நாட்டமாய் நின்றால், நாமரூபம் மறைந்துபோம். பிரபஞ்சத்தோற்றம் பொய்யாய்ப் பழங்கனவாய்ப் பறந்துபோம்.

மேற்கண்ட இரண்டு மார்க்கங்களில், அவரவர் அனுபவத்தின்படி எம்மார்க்கம் சுலபமாகத் தோன்றுகிறதோ அம் மார்க்கத்தைக்கைப்பற்றி அப்பியசிக்க வேண்டும். பிபீலிகாமார்க்கம் விகங்கமார்க்கம் என்ற இரண்டில் இது விகங்கமார்க்கமாகும். ஏககாலத்தில் மாயையை நீக்கிநிற்கும் இவ்வப்பியாசம் யாவராலும் செய்யக்கூடிய தல்ல. இது மனோலயம் வாய்ந்த அதி

தீவிரபக்குவிக்கே உரியது. மனதை வென்றாலன்றி மாயை யொழியாது. மனமே மாயையா யிருத்தலின்.

“ பிறப்பிறப்பாம் பெயருடைய விந்தமாயைப்
பெருமையினை முடிவுபெறப் பேசவொண்ணு
வறப்பெரிய தன்மனத்தை வென்றான்மாளு
மல்லதொரு வகையாலு மகற்றலாகா (வாசிட்டம்)
* * * * * ”

மண்ணையன்றிக் குடமில்லை, பொன்னையன்றிப் பணியில்லை. உள்ளது மண்ணும் பொன்னுமே. குடம் என்பதும் பணி என்பதும் வார்த்தைமட்டுமே அதுபோலவே மனதினின்று முதிக்கு மிப்பிரபஞ்சம் சொரூபத்தை யன்றி வேறில்லை. யாவும் சொரூபமேயாகும்.

“ உன்னுறு மனத்தினாலே யுலகமா மிந்திர சாலந்
துன்னுறும் பணிக ளென்னுஞ் சொற்பொருட் பொன்னையன்றி
யன்னிய மில்லைப் பொன்னாற் பணியென வறைய வேண்டா
பன்னிய உலகாஞ் சொற்குப் பாமன்றிப் பொருள்வேறில்லை”
(வாசிட்டம்)

அதுவிதுநீ நான்முதலாய்க் காண்பதெல்லா
மணுவுமிலை யணுவுமிலை யணுவுமில்லை
யெதுவெதுதான் திரிசியமா யெங்கேயெங்கே
யெவ்விதமாய்த் தோற்றினுமத் தோற்றமெல்லாந்
திதமருவுந் திருக்கான பிரமமேயாந்
திலமளவு மையமிலைச் சத்தியந்தா
னிதமனைய பாப்பிரம நானேயென்று
நிகழ்பிரம நிச்சயமே தருப்பணங்காண். (ரிபுகீதை.)]

(தொடரும்.)

சீடன்.

---

## இல்லறம்—மறுபிறப்பு.

(33-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி நாகங்கள்:—மூஷாவஸ்தை, வஸாகூபம், சலபட்சம், மூத்திர பானம், சல்மல்லியா ரோகணம், இரக்தபோஜனம், கிருமிபோஜனம், சுவா மாம்சபோஜனம், அக்கினிஜ்வாலா பேசனம், சிலா விருஷ்டி, வன்னி விருஷ்டி, காலசூத்திரம், க்ஷாரோர்தம், உஷ்ணதோயம், அதச்சிரச் சோஷணம், க்ஷாரஸேவனம், பாஷாண யந்திரபீடை, மருப்பிரபதம், புரீஷலேபனம், கிருகசதாரணம், புரீஷபோஜனம், ரேதஸ்பானம், சந்தி தாகனம், அங்காரசையாப் பிரமணம், முசலமர்த்தனம், பகுகாஷ்ட யந்திரகர்ஷணம், சஸ்திரபேதனம், பதனோத்பதனம், சதாதண்ட விபீடனம்,

கஜகர்தஹனனம், நாஞுபுஜகதம சனம், தாம்பானம், பாசபந்தம், நாஞு சூலநிபீடனம், முககூாரோதசு நிஷேசனம், கூாராம்புபானம், தப்தாய சூசிபட்சணம், கூாராம்பு பூர்வாரந்திர பிரவேசனம், மேகபோஜனம், ஸ்நாயுச்சேதனம், ஸ்நாயுதாகனம், அஸ்திபேதனம், சிலேஷ்மாரனம், பித்தபானம், மஹாதிந்த நிஷேவணம், அத்யுஷ்ண தைலபானம், கூாரோதகபானம், கஷாயோதகபானம், தப்தபாஷாண போஜனம், அத்யுஷ்ண வலிததாஸ்நானம், தசன்மாத்தனம், தபதாயசபனம், சந்தப்தாம்பு நிஷேவணம், சூசிபிரக்ஷேபணம், சிச்சாயோ பாரபந்தனம், விருஷ்ஞுயோ பாரபந்தனம், விருகூாக்கிர பதனம், தீக்ஷண தாரஸ்திரசையை எனநாகபேதங்கள் பலவாம். இவை ரௌரவம் கும்பீபாகம் முதலாகக் கூறப்பட்ட நாகங்களின் பிரிவுகளாம். நன்றிமறந்தவர்கள், தாய்தந்தையரை நிந்தித்தவர்கள், சகோதரதுரோகம் செய்தவர்கள், குருதுரோகம் குருநிந்தை செய்தவர்கள், அக்னி சாக்ஷியாகக் கைப்பிடித்த மனைவிக்கு இடுக்கண் விளைத்தவர்கள், கொண்ட புருஷனுக்குத் துரோகஞ் செய்தவர்கள், திருடினவர்கள், கொலை செய்தவர்கள், பெரியோரை அவமதித்தவர்கள், சுயமத விரோதிகள், தெய்வத்தை யிகழ்ந்தவர்கள், தர்மத்தைக் கெடுத்தவர்கள், தர்மசொத்தை யபகரித்தவர்கள், விசுவாசகாதகர்கள், வைதிக நிந்தனை செய்தவர்கள், இராஜதுரோகிகள், எஜமான துரோகர்கள், குடும்பங் கலைத்தவர்கள், பொய்ச்சாட்சி சொன்னவர்கள், பொய்ப் பத்திரம் பிறப்பித்தவர்கள், பிறரைப் பழித்தவர்கள், வாழுங்குடிக்குத் தீங்குசெய்தவர்கள், சிநேகதுரோகிகள், கொடுப்பதைத் தடுத்தவர்கள், ஜப ஆசார ஹீனர்கள், எப்பொழுதுங் கெட்ட சித்த முள்ளவர்கள், முதலான பாபிகள் இந்த நாகங்களை யடைந்து சதா துன்பத்தையே அனுபவித்துக்கொண்டிருப்பார்கள்.

இங்ஙனங் கூறிய நாகங்களிற் சென்று அங்கு துன்பத்தை யனுபவித்த பின்னர் அந்தப்பாப சேஷத்தினுல் மீண்டும் புவியிற் பிறப்பார்கள் “வேதாகமங்களையோதி யந்நெறி தவருமலனுட்டித்தவர் சொர்க்காதி போகபூமியிற் சென்று அங்குள்ள போகங்களை யனுபவித்து, முடிந்தபின் மீண்டும் பூலோகத்தில் உயர்ந்த குலத்திற் பிறந்து, வேதாகம விதிப்படி நடந்து பின் சாலோக சாமீப சாரூப பதவிகளைப் பெற்றுப் போகத்தில் வெறுப்புத்தோன்றியவுடன் சாயுஜ்ய மென்கிற மீளாக்கதியைப் பெறுவார்கள்.” வேதாகம விதிகடந்து கொலை, களவு, வியபசாரம், பொய்கூறல், பிறர் பொருளை யபகரித்தல், பிறர் நிந்தை, குருநிந்தை, தெய்வநிந்தை, சிநேக துரோகம், ஏழைகட்கிரங்காமை யாதி மஹா பாதகங்களைமகிழ்ந்து செய்தவர் நாகலோகங்களிற் சென்று அங்குள்ள துன்பங்களை யனுபவித்து முடிந்தபின் மீண்டும் பூலோகத்தில் புல், பூண்டு, செடி, கொடி மரங்களாகியதாவர ஜந்துக்களாகவும், நாய் பன்றி முதலிய ஈனஜனன ஜந்துக்களாகவும், மனிதரில்

இழிகுலத்தில் குட்டம், தொழுநோய், குருடு, செவிடு, கூன் முதலிய நோயாளராகவும் ஜனித்துப், பாபசேட மகிமையால் மீண்டும் பாபகன்மங் களையே செய்து நாகங்களிற் சென்று வருந்தி யங்குமிங்குமாக அலைந்து கொண்டே யிருப்பார்கள்'' என்று சிவ தருமோத்தரங் கூறியது. இவ்வாறே உண்மைநூல்க ளெல்லாம் கூறுகின்றன. இவ்வகையான மறுபிறப் புண் மையைக் காரணமாகக் கொண்டே புண்ணியாபி விருத்திக்கும், பாபநாசத் துக்கும் எற்ற கருமங்களை நூல்கள் விதித்திருக்கின்றன. சகலாண்ட சரா சரங்களையும் படைத்துக்காக்கு மொரு தெய்வ முண்டென்றும், சொர்க்க நா கங்களுண்டென்றும், பாபபுண்ணியங்க ளுண்டென்றும், அவற்றின் பயனைச் சொர்க்க நரகங்களில் அனுபவிக்கவேண்டு மென்றும், அதன் பின் மறு பிறப்புண் டென்றும், நம்புகிறவர்களே ஆஸ்திகரென்னப் படுவார்கள். அவர் களே நாம் கூறிவந்த விதிவிலக்குகளை யறிந்து நன்மார்க்கத்தில் நடந்து நற்பயன் பெறுகிறவர்கள். மறுபிறப்புண்டு என்கிற நிச்சயமான நம்பிக்கையி லேயே நமது மதம் ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது. அப்பிறப்புகளை யடை யாமல் தப்பித்துக்கொள்வதே முக்தி யென்னப்படும். இப்பிறப்புகள் கன்ம காரணமாக வருதலால் அக்கன்மங்களை யொழிக்க வேண்டுவது அவசிய மாயிற்று. அதற்கேற்றவாறே விதிகளு மேற்பட்டுள்ளன. இவ்விதிகள் அநாதி, முத்தி, சித்துருவனுன ஸ்ரீ பரமேசுவரனுலேயே வேதங்களில் விளக்கப்பட்டன வாதலால், அவற்றைக் கைக்கொண்டு ஒழுகி நற்கதி பெறு றுவதே நமக்குறுதியாம்.

இவ்விஷயத்தைக் குறித்துப் பலவகையான கேள்விகளை யெழுப்புவர் சிலர். இவர்களுக்கு ஆன்மப் பொருளுண்டென்பது தெரியாது. பூதக்கலப் பினலாகிய சரீரமே பொருளெனக் கொண்டவர்கள். இவர்கள் ஸ்தூலப் பொருள்களைச் சோதித்து அம்மட்டில் திருப்தியடைந்து மறுபிறப்பில்லை யென்பார்கள். அவருள் ஒருசாரார் உலகம் அநாதி, சிருஷ்டிப் பொருள்க ளுண்டாவது இயற்கையாலேயே. இச்சரீர மழிந்தால் அதுமறுபடியு முண் டாகுமென்பது நம்பத்தக்கதல்ல என்பர்; மற்றொருசாரார் உலகந் தற்செய லால் மாறிமாறி வருந்தன்மையுள்ளது. ஒருதர முண்டான சரீரவமைப்பு மறுதரமுண்டாவது சமுசயமே யென்பர். இவர்களுக்கும் ஆன்மப்பொரு ளிற் சந்தேகமே. ஆன்மாவென்ப தொன்று இல்லையெனக் கொண்டவர் களே. இனி அணுக்களால் உலகமுண்டா மென்பது ஆஸ்திக நாஸ்திகர் இருவருக்கும் ஒப்பமுடிந்தது. அணுக்கள் பரமாணுக்களாய் எவ்வித கரு விகளாலும் கண்டறிய முடியாதனவாம். இவைகளே பரமாணுக்கள் என்னப் படும். இவ்வாறு ஜடம், சித் என இருவகையாம். இவற்றுள் ஜடவணுக்கள் சரீராதி கருவி கரணங்களுக் காதாரமாய் நிற்பன. சித்து என்பதே ஆன்மா வாம். அணுவென்பன வெல்லாம் அநாதி நித்தியமாம். அநாதி நித்திய மென்பன வெல்லாம் அழிவற்றனவாம். இவற்றுள் சித்சொருபமான ஆன்

ம்வணு தனித்து நிற்பதில்லை. எப்பொழுதும் ஒரு சரீரத்தை அவாவியே நிற்பதாம். அச்சரீரமும் ஸ்தூலம் சூட்சுமம் காரணமென மூவகைப்படும். இவற்றுள் ஸ்தூலம் எல்லாராலு மறியக்கூடியது; சூட்சுமம் யோகிகள் யோக காட்சியிற் காண்பது. சொர்ப்பனவஸ்தையில் நடக்கும் விவகாரங்களெல்லாம் சூட்சும சரீரத்துக்கேயாம். காரணசரீரத்தைப் பற்றித் தெய்வம் என்னும் விஷயத்தில் விவகரிப்போம். காந்தத்துக்கும் இரும்புக்கு முள்ள திராவக சக்தியைப்போல ஆன்மாவுக்கும் சரீரத்திற்கும் இயக்கச் சத்தியுண்டு. இவ்வான்ம வணுவின் சூட்சுமசரீரத்தில் பலவணுக்கள் வந்துகூட அது ஸ்தூல சரீரமாகப் பரிணமிக்கும்; பரிணமித்தபோது, அச்சரீரத்துக்கு அவயவப் பாகுபாடுகள் காணப்படும். அச்சரீரத்தில் ஆன்மா அணுரூபமாய் வசித்துக் கண் முதலிய ஞானேந்திரியங்களால் விஷயங்களை யறிந்து, கன்மேந்திரியங்களினால் கன்மங்களைச் செய்துகொண்டு சுகதுக்கங்களை யனுபவியாநிற்பன். காந்தமும் இரும்புங் கூடியகூட்டம் காலாந்தரத்தில் அவற்றின் சக்தி குன்றிவிடுவதுபோல ஆன்மாவும் சரீரமும் பிரியும். இதுவே மாணமெனப்படும். காந்தமும் இரும்புங்கூடிய கூட்டத்தை மற்றொருவன் பிரித்து வேறுபடுத்துவது போலக் கடவுள் கன்மங்காரணமாகப் பிரிப்பர் என்று கூறுவர். எங்ஙனமாயினும் சரீரத்தை விடுவதேமரணமும் சரீரத்தை யடைவதே பிறப்பும் என்பதுமாம். இதனால் சரீரத்துக்கு வேறாக ஆன்மப் பொருளென்றொன் றுண்டென்பதும், அதுபரமாணுரூப மாதலால் எவ்வித சோதனையாலுங் கண்டறியமுடியா தென்பதும், அதனைக் கண்டறியும் சக்தி யற்றபதார்த்த சோதகர்களே சரீரத்தையே பொருளெனக் கொண்டு, அது அழிந்தால் மீண்டு முற்பத்தியாவதில்லையென்றுங் கூறுவார்கள். யோக காட்சியால் ஆன்மப்பொருளைக் கண்டறிந்தவர்கள் ஆன்மா வேறு, சரீரம் வேறு, சரீரம் அழியுந்தன்மை யுள்ளது, ஆன்மா அழிவற்றது என்று கொள்வர். அழிவற்ற வான்மப் பொருள் எப்பொழுதும் ஒரு சரீரத்தையே அவாவி நிற்கு மியல்புள்ள தாதலால், தான் முன்கொண்ட சரீர மழியவே வேறொரு சரீரத்தை அவாவிச் செல்லும். அச்சரீரத்தைப் பெறுமளவும் சூட்சும சரீரத்துடன் அலையா நிற்கும். அப்பொழுது கருவி காரணங்களற்றுள்ள தாதலால் சுக துக்கங்களை யுணராது. தன் இயற்கையறிவு விளங்கும்படியான ஓர் சரீரத்தை யடைந்தே தீரும். அநாதி நித்தியமாகிய வான்மப் பொருளுக்கு அநாதியாகவே சரீர சம்பந்த முண்டு. அவ்வான்மா சரீரத்தை விட்டுத் தனித்து நில்லா வியற்கை யுடையது. கல் கட்டைகளைப் போன்ற சரீரத்தை நடத்து மியல்புள்ளது. ஆன்மாவின்றிச் சரீரந் தானே அசையாது. ஆன்மா சரீரத்திலுள்ள வுறுப்புகளில் ஒன்றாகாமல் தனித்து அச்சரீரத்தில் வசிக்கும் அணுப்பொருளே. அது சரீரத்தைப் பெறு மியல்புள்ளதாயினும் இதே சரீரத்தை மறுபடியும் பெறுமென்பது உசித மாகாதெனின், இதே சரீரத்தை மீண்டும் பெறுமென்று யாம் கூறவில்லை. மற்றோர் சரீரத்தைப்

பெறும். சரீரமின்றி யிராது என்பதேயாம். இனி யாம் கூறுவது ஆன்மா என்பது ஓர் அணுப்பொருள்; அது ஓர் சரீரத்தை யவாவியே நிற்குந் தனிப் பொருள். அது சித்துருவம். சரீர வுறுப்புகளில் ஒன்றாகாமல், வேறாய்ச் சரீரத்தில் நின்று அச்சரீரத்தை நடத்தும் வல்லமையுள்ள பொருள். பிணி முதலியவற்றால் தான் கொண்ட சரீரம் மெலிந்து சக்தியற்றுப் போனால் அதைவிட்டு வேறொன்றை நாடிச்செல்லு மியல்புள்ளது. "கர்மேந்திரிய ஞானேந்திரியங்களைக் கொண்டு விஷயங்களை யுணர்ந்து கன்மங்களை யியற்றுந் தன்மை யுள்ளது, எவ்வித கருவிகளாலுஞ் சோதித்தறிய முடியாதது. நித்தியமானது" என்பதே நமது வேதங் கூறிய ஆன்ம விலக்கணமாம். இவ்வித இலக்கணங்களை யுணராதார் ஆன்மாவைச் சோதித்தறிந்து கூறுவது கூடாத விஷயமாதலால் அவர் கூற்றை யாம் கவனிக்க வேண்டியதில்லை யென்க.

இனி யொரு சாரார், ஆன்மா சரீரத்தின் பொருளல்ல. அறியுந்தன்மை மூளையினதே. சரீரத்துக்கு வேறாக ஆன்மா வென்று ஒரு பொருளிருப்பின் அதற்கு மறுபிறப்புண்டென்று கொள்ளக்கூடும். அஃதில்லை. அறிவைக் கொண்டு அவ்வறிவுள்ளதே யான்மா வென்போமானால் அது பொருந்தாது. அறியுந்தன்மை மூளைக்குரியதே யாதலால் ஆன்மா வுண்டென்பது நம்பத் தக்கதல்ல. சரீர மழிந்துபோவது பிரத்தியட்ச மாதலால் சரீரத்துக்கோ ஆன்மாவுக்கோ மறுபிறப்புண்டென்று ஒப்புக்கொள்வது உசிதமாகா தென்பர்.

மூளை யென்பது அறியுந்தன்மை யுள்ளதல்ல. கண், காது முதலிய வுறுப்புகளைப்போல் அதுவு மொரு ஞானேந்திரியமே. இதனையே துவாதசாந்தக் கருவி யென்றும், அறிவுக்குப் பிரதான ஸ்தானமென்றும், பரமான்மாவுக் கிருப்பிட மென்றும் நமது யோக நூல்கள் கூறுகின்றன. கண், காது, மூக்கு முதலிய கருவிகள் நோயால் மெலிந்துபோ யிருக்கும்போது அக்கருவிகளைக்கொண்டு ஆன்மா விஷயங்களை யுணரமுடியாம லிருப்பதுபோல மூளையும் வியாதியால் மெலிந்தபோது உணருந்தன்மை யங்குமில்லை; பூத பிசாசு பீடைகளாலும் ஆன்மா தன்னை மறந்திருக்கிறது. ஆழ்ந்த சிந்தனையி லிருக்கும்போதும் இம்மறதி யுண்டு. யோகிகள் நிஷ்டையி லிருக்கும்போதும் தம்மை மறந்து சீதோஷ்ண துன்பங்களை யுணராம லிருப்பது பிரத்தியட்சத்தில் காண்கிறோம். நல்ல தூக்கத்திலும் ஆன்மா தன்னை மறந்து ஒன்றையு முணராம லிருக்கிறது. சரீரமே யான்மாவாக விருந்தால் மறந்திருப்பதற்கு யாதுங் காரணமில்லை. ஏனெனில், அந்தச் சுழுத்தி காலத்திலும் சரீர மிருக்கின்றது. மூளையோ வெனின், மூளையு மிருக்கின்றது. சரீரமும், மூளையுங் கூடியிருக்கும்போது அறிவில்லாம லிருப்பதற்குக் காரணமில்லை. அங்ஙனமன்று உதய முதல் உழைத்து மூளை ஓய்ந்திருக்கிறது எனின், அது

பொருந்தாது. ஏனெனில், மூளையிற் சம்பந்தித்து நிற்கும் நாடிகள் வெளி விஷயப் பொருள்களால் அசைவதும், அவ்வசையு தாக்கியதும், மூளையி லுண்டாகும் ஒளியே அறிவு என்று கூறுவதா லென்க. இவ்வித வறிவு அந்தச் சுழுத்தி காலத்தில் இல்லை யென்பதைச் சோதகர்கள் ஒவ்வார். இத னுண்மையைச் சோதித்தறிவதும் ஒருவராலு மாகாத விஷயமேயாம். ஏனெனில், மற்ருேர் பொருள் நாடிகளில் தாக்கியவுடன் அசைவது நாடி களின் இயற்கை. அந்நாடிகள் தாக்கின் பிரகாசிப்பது மூளையின் இயற்கை. நாடிகள் தாக்கினு மூளை பிரகாசியா தென்பது இயற்கைக்கு விரோத மாத லால் பொருந்தாமை யுணர்க. (வரும்.)

சிவானந்த ஸாகர யோகீஸ்வரர்.

---

## "நல்லாயன்" தவறுதலும் D. G. A. பர்ஞண்டஸ் என்பாரின் போய்க்கூற்றும்.

இந்த ஆகஸ்ட்மீ வெளிவந்த "நல்லாயன்" சஞ்சிகையில் ம-ா-ா-ஸ்ரீ D. G. A. பர்ஞண்டஸ் (வைகைவாசி) என்பவர் 'அறியாமைக்கோர் ஔஷதம்' என்ற தலையங்கத்தோடு ஒருகடிதம் வரைந்துளார். இவர் அதில், "ஆனந்தபோதினியில்" நாம் கிருஸ்துமதத் தூஷணையான விஷயங்களை வெளியிட்டிருப்பதாகக் கூறி, நமது சந்தா நேயர்களிலுள்ள கிருஸ்தவ சகோதரர்க ளெல்லாம் 'ஆனந்தனை' யாதரிக்காமல் பவிஷ்காரம் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிருர்.

இவருடைய பொய்க்கூற்று துவேஷபுத்தியால் எற்பட்டதே யாகும். ஏனெனில், கிருஸ்தவப் பத்திரிகைகளில் "பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர் கள் கடவுளாகார்; இந்து மதத்தில் மோக்ஷமில்லை; இந்துக்கள் வணங்குங் கடவுள் மெய்க்கடவுளல்ல" என்பது முதலான கொடிய தூஷணைகள் வரையப்படுவது யாவருமறிந்த விஷயம். அந்தோ! அவற்றைக் காணும் இந்துக்கள் மனம் எவ்வளவு வேதனைப்படும் என்பது மட்டும் இவர் புத் திக்குப் புலப்படவில்லை போலும். இதையும் நினையாது, ஒருவர் கூறுவது உண்மை தாஞ வென்பதையும் சிந்தியாமல், அவர்கள்மேல் இல்லாத குற்றத் தைக் கூறும் ஒருவர் துவேஷபுத்தியால்தான் அவ்வாறு கூறவேண்டும்.

நாம் கூறியுள்ளதும், கூறுவதும், "அவரவர்கள் தத்தம் மதத்தை விர் த்திசெய்ய முயல்வது இயற்கையே. ஆனல் கிருஸ்துமத போதகர்களில் சிலர், அன்னியர் தங்கள் மதத்தை விரும்பி அவர்களே வந்து சேரும்படி தங்கள் மதத்தின் விசேஷத்தைப் போதிப்பதை விட்டு, இந்து வாலிபர் களையும் பெண்களையும் தந்திரமாகவும் சூதாகவும் அவர்கள் சுற்றத்தாரை விட்டுப்பிரித்து, எங்கேனும் கொண்டுபோய் மறைத்துவைத்திருந்து அவர் களைக் கிருஸ்தவராக்குகிருர்கள். ஆகையால் அவர்கள் போதனைக்குச் செவிகொடாதீர்கள். அம்மத மாதர்கள் நமது வீட்டுக்குவந்து நம்பெண்க

ளுக்குக் கல்விகற்பிக்கும்படி இடங்கொடாதீர்கள். அனேகர் அப்படிச் செய்து தம்மக்களை யுயிரோடிழந்தனர். இதற்குப்பல அத்தாட்சிகளுண்டு. நமது மதத்தில் உண்மையான மோக்ஷமார்க்கம் கூறப்பட்டிருக்கிறது. ஆன்ம பரமான்ம லட்சணமும், மோக்ஷலக்ஷணமும், ஞானமார்க்கமும் நமது சாத்திரங்களில் கூறப்பட் டிருப்பதுபோல் வேறெதிலும் கூறப்படவில்லை. ஆகையால் அன்னிய மதபோதகரின் மயக்கில் சிக்காதீர்கள்......" என்று நம்மவருக்கு நாம் அறிவிக்கிறேம். நம்தாய் நாட்டிற்கும், நமது ஜாதிக்கும், மதத்திற்கும், கடவுளுக்கும் இத்தொண்டு புரியவேண்டுவது நமது கடமையாகும். இதைச் செய்வதில்,

" யாமார்க்கும் குடியல்லோம், யாது மஞ்சோம்...... "

தமது மதத்தவர் இந்து மதத்தை வெள்ளையாகத் தூஷிப்பது மட்டும் நமது பர்ஞண்டஸ் நண்பர்க்குத் தித்திப்பாகவிருக்கிறது. நாம் நமது மதத்தவரை அன்னிய மதத்தில் போய் விழுந்து பின்னுல் தவிக்கவேண்டாம் என்று கூறுவது எட்டிக்காயாக விருக்கிறது. இவர் மதவொழுக்கம் இவ்வாறுதான் போதிக்கிறதாக்கும். இவர் நம்மேல் இல்லாக் குற்றத்தைக் கூறி 'ஆனந்தனை' அவதூறு செய்வதோடு, நமது 'ஆனந்தனது' நண்பர்களாகிய எல்லா கிருஸ்தவ சந்தாநேயர்களும் தம்மைப்போலவே குறுகியநோக்கமும் தவருன நியாயமு முடையவர்களெனக் கருதி யவர்களை யெல்லாம் 'ஆனந்தனைப்' பவிஷ்காரம் செய்யும்படி தூண்டுகிருர்.

இவர் கடிதத்தை வெளியிட்ட " நல்லாயன் " பத்திரிகாசிரியர், இவர் நாம் கிருஸ்துமதத்தைத் தூஷித்ததாகக் கூறுவது உண்மையா வென்பதை யறிந்தபின்பே யதை வெளியிட்டா ரென்றே நாம் கருதவேண்டும். ஏனெனில், அது அவருடைய கடமையும் நியாயமுமாகும். ஒருகால் " கடிதம் எழுதுவோரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பல்ல " வென்ருலோ, இது அபிப்பிராயமல்ல; தம் போன்ற ஒரு பத்திரிகாசிரியர் மேலும் ஒரு சஞ்சிகையின் மேலும் மதத்தூஷணை செய்வதாகக் குற்றமேற்றி, அப்பத்திரிகையைப் பவிஷ்காரம் செய்யும்படி கூறப்பட்டிருக்கிறது. இத்தகைய விஷயம் உண்மையாவென அறிந்தே அதைவெளியிட வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். ஆகையால்,

" கிருஸ்துமதம் பொய், அதில் கூறப்பட்டது மெய்யான் கடவுளல்ல, அல்லது அதில் மோக்ஷமில்லை, ஏசுகிருஸ்து கூறியது பொய்...... " என்பது போன்ற மததூஷணையான மொழிகள், இது காறும் வெளிவந்த 'ஆனந்தபோதினி' சஞ்சிகைகளில் எதில் எப்பக்கத்தில் கூறப்பட்டுள்ளது என்பதை நமது சகோதரராகிய ' நல்லாயன் ' ஆசிரியர் அறிவிக்குமாறு கோருகிறேம். அல்லது தவருக நேர்ந்திருந்தால் அதையேனும் கூறித் தமது கடமையை நிறைவேற்றுவாரென நம்புகிறேம்.

பத்திரிகாசிரியர்.

## மாணவர்களுக்குச் சில போதனைகள்.

(34-ம் பக்கத் தொடர்ச்சி.)

6. குரு பக்தி:—மாணவர்களே! நீங்கள் எப்போதும் குருவினிடம் பக்தி (அச்சமும் அன்பும்) வைக்கவேண்டும். இன்றேல் நீங்கள் மெய்யான கல்வி யறிவு பெறுவது கஷ்டமே. நம் முன்னோர்க ளெல்லாம் அவ்வாறு குருவுக்குத் தொண்டு புரிந்துகொண்டு கல்வி கற்றதனாலேயே இருமைக்கும் பயன்படத் தக்க கல்வியைக் கற்று, மேதாவிகளாய் விளங்கினதோடு க்ஷேமமாகவே தங்கள் வாழ்நாளைக் கழித்தார்கள். ஏறக்குறைய நாற்பது, ஐம்பது வருடங்களுக்குமுன் வரையிலுங்கூட நம் நாட்டில் குரு பக்தி குன்றாதிருந்து வந்தது. உபாத்திமார்களும் மாணவர்களைத் தங்கள் மக்கள் போல் மதித்து, அவர்களுடைய கல்வி மட்டுமல்ல, ஒழுக்கம், நடக்கை யாவற்றையும் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து ஒழுங்கு படுத்தி வந்தார்கள்.

இப்போதோ மாணவர்களுக்குக் குருவென்ற மதிப்பே யில்லை. உபாத்தியாயர்களும் தாங்கள் பெறும் சம்பளத்திற்கு ஒருமுறை பாடபுத்தகத்திலுள்ளவற்றை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதோடு தங்கள் கடமை கழிந்ததென்று கருதுகிறார்கள். ஆகவே கல்வியும் திருப்தியற்றதாகவும், வயிற்றுப் பிழைப்பு தவிர வேறொன்றுக்கும் பயனில்லாததாகவும் இருக்கிறது.

7. அதிலும் வயிறுவளர்க்க மட்டுமே உதவும் ஆங்கிலங்கற்பிக்கும் உபாத்திமாரிடமேனும் அச்சமட்டு மாவது காட்டுகிறீர்கள். நமது தாய்ப்பாஷையையும், நமது மதாசார ஒழுக்கங்களையும், அரிய முன்னோர் நீதிநூல்களையும் கற்பித்து உங்கள் ஜன்மம் நற்பயன் பெறுமாறு உதவிபுரியும் உபாத்திமார்களைக் கடவுளாகப் பாவிக்கவேண்டும். இதற்காகவே இவர்களுக்குச் சாதாரணமாய் உபாத்தியாயர் என்னாது குரு என்று பெயரிடப்பட்டது. இதைவிட்டு இவர்களைச் சுத்தமாக அலட்சியம் செய்கிறீர்கள். அந்தோ! இது கல்வியாலாய பயனை நீங்களடையா வண்ணம் செய்துவிடுமே யென்று மிகவும் விசனிக்கிறோம்.

நண்பர்களே! உங்கள் சுயநன்மையைக் கோரிக் கூறும் இதை யலட்சியம் செய்யாதீர்கள். இதைக் கவனத்தில் வைத்துக் குருவினிடமும் தாய்ப்பாஷையினிடமும் பூரணபக்தி வையுங்கள்.

கல்வி கற்பது வயிறு வளர்ப்பதற்கு மட்டும் என்று கருதாதீர்கள் என்று முன்னமே கூறினோம். உலக வாழ்க்கைக்குப் பொருளீட்டல் அவசியமே யெனினும், கல்வி கற்பது முக்கியமாக அறிவை விசாலப்படுத்தி ஆண்டவன் அருளைப் பெறுவதற்கே யாகும். ஆகையால் மறுமைப் பயனைப் பெறுதற்கு அவசியமான கல்வியைக் கற்காதவன் ஒருபோதும் கல்வி கற்றத

னுலாய பயனை யடையமாட்டான். அத்தகைய கல்வி நமது தாய்ப்பாஷை யில்தா னிருக்கிறது என்பதை நன்குணருங்கள்.

8. நண்பர்களே! ஒரு மனிதனுக்குக் கல்வியினும் சிறந்தது ஒழுக்கம். கல்வியும், ஒழுக்கமும் வெவ்வேருனவை. கல்வி கற்பதனுலேயே நல்லொழுக்கம் படிந்துவிடாது. இப்போதுள்ள பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கம் நன்னடக்கை போதிக்கப்படுவதில்லை. பிள்ளைகளின் நடக்கை கவனிக்கப் படுவதே யில்லை. சுமார் நாற்பது வருடங்கட்கு முன் ஒரு சிறுவன் மூக்குத்தூள் போடுவதாய் உபாத்தியாய ரறிந்தால், அவன் அவ்வழக்கத்தை யொழிக்கு மட்டும் உபாத்தியாயர் தினம் அவனைக் கவனித்துத் தண்டித்துக்கொண்டே யிருப்பார். இப்போதோ 1, 2, 3, 4-வது வகுப்புகளில் வாசிக்கும் மாணவர்கள், எதிரில் பெரியோர் இருக்கிருர்கள் என்பதைக் கூடச் சற்றும் மதியாமல் புத்தகங்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு டிராம் வண்டியில் உட்கார்ந்தபடி ஸிகரெட் பிடித்துக்கொண்டு செல்வதைக் கண்ணுல் காண்கிருேம். அந்தோ! இது கௌரவமான அல்லது யோக்கியமான நடக்கை யென்று ஒருபோதும் கருதாதீர்கள். மேலும் புகையிலையில் உண்டாகும் விஷம் சீக்கிரத்தில் கொடியவியாதிகளை யுண்டாக்குமென்பது நிச்சயம். இத்தகைய அநாசார வழக்கங்களை யெல்லாம் ன்பி பற்றிக்கொண்டு நாம் நாகரீகச் சீர்திருத்த மடைகிருேமென்று கருதுவது நாகலைப் பூசிக்கொண்டு, அத்தர் தடவிக் கொள்கிறேன் என்பது போலாகும்.

உங்களுக்கு ஆசார ஒழுக்கங்கள் போதிக்கப்படாத வரையில் நீங்களே அவற்றைக் கற்றுக் கற்றபடி நடக்க முயல வேண்டும். அப்போதுதான் நீங்கள் முன்னேற்ற மடைவீர்கள். நம் தாய் நாடும் சிறப்படையும். நற்போதனைகளைக் கதைபோல் வாசித்து விட்டு, "ஆம் இதில் கூறப்படுவதென்னமோ உண்மைதான்" என்று அச்சமயம் மட்டும் கூறிவிட்டு, உடனே மறப்பதில் ஒரு பயனுமில்லை. வாசிப்பதில் கூறி யுள்ளபடி நடக்க வேண்டும். அப்படி நடப்போர் சொல்ப காலம் வாசித்தாலும், எனையோர் ஆயுள் முழுமையும் படித்தாலும் அடையாத பலனை யடைவார்கள். படித்த படி நடக்கப் படிக்க வேண்டும்.

"படிக்கும்படி நடக்கப் படிக்கா லோபிகள் மோக்ஷப் பதமற்றுப் போனுலும் போகட்டும்........" என்ருர் ஒரு மகான்.

பொய்யா மொழியாராகிய நமது நாயனுர் தமது தமிழ்மறையில் கல்வியைப்பற்றிக் கூறவந்த அதிகாரத்தின் ஆரம்பத்திலே முதலில்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக" என்றருளினர்.

இதன் பொருள் "ஒருவன் கற்கவேண்டிய நூல்களைப் பழுதறக்கற்க வேண்டும். அப்படிக் கற்றபின் அந்நூற்களில் கூறியுள்ள நெறியில் நிற்க

வேண்டும்" என்பதே. அதாவது அவற்றில் கூறியுள்ளபடி நடக்கவேண்டும், அப்போதுதான் கற்றதனுலாய பயனையடைவான் என்பதாம். நண்பர்களே! இத்தகைய ஆன்ரூேர் வாக்குகளை அலட்சியம் செய்யாதீர்கள்.

9. சகவாசம்:—எப்போதும் கெட்ட நடக்கையுடைய பிள்ளைகளோடு சேராதீர்கள். பாலியவயதில் அதிசீக்கிரமாக ஒருவருக் கொருவர் நேசமுண்டாகி விடுவது சுபாவம். ஒருவருடைய குணங்களையும் நடக்கைகளையும் அறிந்தபின்பே அவர்களோடு சினேகம் செய்யவேண்டும். சினேகமுண்டானபின் அது மனமொத்த உண்மை நேசமாய் எப்போதும் பிரியாமலிருக்கவேண்டும். சினேகருக்குள் பொருமை, வஞ்சனை, கபடம் இவைகளிருக்கலாகாது.

சகவாசத்தால் ஒருவர் குணம் நடக்கைகள் இன் ெனுருவருக்குப் பற்றும். "தான் பத்தினியாயின் தாசி வீட்டில் குடியிருந்தால்தா னென்ன" என்ற ஒரு பழமொழியுண்டு. அது விதியில்லாமல் அத்தகைய சந்தர்ப்பம் நேர்ந்தால் ஒருவித சமாதானத்திற்குக் கூறிக்கொள்வதே யன்றி வேறல்ல. உலக அனுபவமறிந்து திடப்பட்ட மனவலிமை யுடையோரே சகவாசத்தால் மாறுதலடைந்து விடக்கூடும் என்ருல், பாலியர் மனம் மிகச் சுலபத்தில் அந்நியர்குணம் நடக்கைகளைப் பற்றிக்கொள்ளும். சகவாசதோஷத்தால் நற்குணம் தீக்குணம் இரண்டும் உண்டாகிவிடும் என்று நமது சாத்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. (தொடரும்)

சீடன்.

---

## நாட்டுக்கோட்டை வைசிய இரத்னங்களில்

### நமது சந்தா நேயராயுள்ள நண்பர்களுக்கு அறிவித்துக் கொள்வது:—

நண்பர்களே! நீங்கள் நமக்கு வரையும் நிருபங்களில் (சிலர்) சந்தா நம்பரை வரைவதில்லை. அது ஒரு பக்கமிருக்க, இப்போது யாவரும் கடிதத்தின் தலைப்பில் இடது பக்கம் ஊரின் பெயரையும், தங்கள் பெயரின் முதற் குறிப்பெழுத்துக்களையு மட்டும் (ரு. கா. மா.) எழுதிவிடுகிறீர்கள். முடிவில் "வேணும் இப்படிக்கு" என்பதன் கீழ் கை யொப்பத்திற்குப் பதிலாக "வலம்புரி விநாயகர் துணை", "வடிவேலர் துணை", "வேம்புலியம்மாள் துணை" என்று எழுதி விடுகிறீர்கள். இதனல் நாம், கடிதம் எழுதினவர்கள் யாரென்றேதெரியாததால், பதில் எழுதுவதற்கே யில்லை. பதில் வரவில்லையென்று நம்மேல் குறை கூறுகிறீர்கள்.

நண்பர்களே! முடிவில் போட்டிருக்கும் கடவுள் துணை தலைப்பில் போடப்படவேண்டும்.கடைசியில் எப்போதும்விளங்கும்படி கையொப்பமிடவேண்டும். இதுவே கடிதம் எழுதுவதன் ஒழுங்கு. ஆகையால் இனியேனும் தயவுசெய்து ஒவ்வொரு கடிதத்திலும் தவருமல் கையொப்பம், விலாசம், சந்தா நம்பர் இவற்றை மறவாது வரையும்படி யுங்களை மிகவும் வேண்டிக் கொள்கிருேம்.

# "ஆனந்தபோதினியின்" பவிஷ்காரமும், உண்ட சோற்றுக்கு இரண்டகமும்.

ஒருவன் இன்னொருவன் வீட்டில் வயிராரப் புசித்து ஆனந்தித்து அருந்திய அவ்வன்ன மளித்தோற்கே தீங்கு எண்ணுவானுகில் அவன் உண்ட சோற்றுக்கு இரண்டகஞ் செய்தவனாகிறான். அவ்வண்ணமே ஓர் மூடனைக் கல்வி நாகரீக முதலிய சிறந்த வித்தையில் பழக்கி ஆளாக்கி சீர்தூக்கிவிட்ட குருவின் அறிவைக் கொண்டே குருவையே அவன் பழிப்பதென்றால் அத்தகையவனும் மேற்கூறிய முதுமொழிக்கிலக்காகிறான்.

'சட்டி சுட்டது, கைவிட்டது,' 'சூ× × அடித்தான், பல்லுடைந்தது' என்றவாறு அறியாமைக்கோர் ஔஷதம் என்ற தலைப்பின்கீழ் வைகைவாசி டி. ஜி. எ. பர்னுந் தென்பவர் நாளது ஆகஸ்ட் மாதம் வெளிவந்த "நல்ல ஆயன்" பத்திரிகையில், கிறிஸ்துமத தூஷணையே வியாசகமாகக் கொண்டுலவும் "ஆனந்தபோதினி" என்ற பத்திரிகையைக் கிறிஸ்துவர்களனைவரும் பவிஷ்கரிக்க வேணுமென்றும், கடந்த ஆறு வருடங்களாய் "ஆனந்தனின்" சந்தாநேயரா யிருந்து வந்தவர் "ஆனந்தனில்" பொதிந்து காணகிடைக்கும் கிறிஸ்துமத தூஷணையைப் பொறுக்கக் கூடாதவராய் இம்மாதத்தோடு பவிஷ்கரித்து விட்டதாகவும், ஆகவே கிறிஸ்து மதத்திலுள்ள ஆண், பெண், பாலர்கள் ஒவ்வொருவரும் மேற்படி பத்திரிகையைப் பவிஷ்கரிக்க வேண்டுமென்றும் வெகுவாய் வற்புறுத்தி எழுதி யிருப்பதைக் கண்ணுற்று கிறிஸ்துமத பாரம்பரைக் குடும்பத்தி லுள்ளவனும், கிறிஸ்து மதத்தையே உயிரினும் பெரிதாக மதிப்பவனுமாகிய நானே ஆட்சேபிக்க நேரிட்டால் மற்றவர்கள் எவ்வாறு இக்குருட்டுக் கொள்கையைக் கண்டிப்பார்க ளென்பது வெளிப்படை.

"ஏனெனில், 'எம்மதமும் சம்மதமே' என்ற சிறந்த மேதாவிகளின் கொள்கையையே அடிப்படையாகக்கொண்டும் தேசத்தில் நல்லொழுக்கமே நிறைந்துலவ வேண்டுமென்ற சிந்தையே தொழிலாகக் கொண்டு தொண்டு புரியும் நமது "ஆனந்தனை" பவிஷ்கரிக்கும்படி சொல்லுவதானது, பெற்று வளர்த்து, தாலாட்டி, பாலூட்டி, சீராட்டி வளர்த்த தாயைக் கொன்றுவிடு என்று சொல்வதற் கொப்பாகுமே தவிர, வேறென்ன? நிற்க, நமது நண்பர் எந்த ஆதாரத்தின் பேரில் "ஆனந்தனை" பவிஷ்கரிக்க வேணுமென்று எழுதினரோ தெரியவில்லை. ஆகிலும் விஷயதானம் புரியும் சில மேதாவிகள் இந்துமத சிறப்பைப்பற்றி எழுதுவத னிடையே கிறிஸ்து மதத்தைப் பற்றிய விஷயங்களை நடுவில் புகுத்து விடுவது சகஜமே யாயினும், கிறிஸ்துவர்கள் வருத்தப்படக் கூடிய விஷயங்கள் காணமுடியாதென்பதே என் எழு வருட அநுபவம்.

உதாரணமாக—ஹிந்து சிறுவர், சிறுமிகளைக் கிறிஸ்துமதப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்புவதால் கட்டாய பாடமாக அவர்கள் தம் மதத்தைப் போதிக்குங் காரணத்தால், இந்துக்களை மேற்படி பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவது உசிதமல்ல வென்று, ஓர் இந்து தமது உரிமையைப்பற்றி, தம்மவர்களுக்கு எழுதுவதினுல் என்ன குற்றம்? இவற்றில் காணும் கிறிஸ்துமத தூஷணை யாது? இவை போன்ற விஷயங்களை ஆதாரமாகக் கொண்டே நமது நண்பர் பவிஷ்கரிக்கும் பாரிய தொழிலில் இறங்கி விட்டார்; பேஷ்! இவரது சொல்ப அறிவை இன்னும் முன்னுக்குக் கொண்டுவர எண்ண மிருக்குமாகில் நமது மதி யூகியாகிய "ஆனந்தனை" வாங்கி வாசித்து அந்தகாரமெனும் அறியாமையை யகற்றி மேன்மை பெறவேண்டு மென்பதே எனது பிரார்த்தனை. இங்ஙனம்,

வைப்பார்புலி. S. S. PILLAI.

YATYIONTOTA,
*Ceylon, 10-8-1921.*

குறிப்பு :—நமது நண்பரின் கடிதம் சஞ்சிகை அச்சு முடியுந் தருவாயில் வந்தது. பாரபட்சமின்றி நடுநிலைமையில் நின்று தமது அபிப்பிராயத்தை வெளியிட்டதற்காக அவருக்கு நாம் மிக்க வந்தனமளிக்கின்றோம். மற்றப்படி, அவர் கூறும் நியாயம் சத்தியமானதாதலின் அதைப்பற்றி நாம் விசேடமாகக் கூறுவது மிகையாகும். ஆயினும் ஒன்றுமட்டு மியம்ப விரும்புகிறோம். அதாவது மூடத்தனமான மதத்துவேஷம் முதலிய குணங்களின்றி இவ்வாறு விஷயத்தை வெளியிடுவோர். மிகச் சிலரே. பத்திரிகாசிரியர்.

---


# வீர நாதன்

அல்லது

## ஓர் மலைநாட்டுத் துப்பறிபவன்.

ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இந்நூலாசிரியரால் எழுதப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், வேறு பல துப்பறியும் நாவல்களையும் நண்பர்கள் வாசித்தே யிருப்பீர்கள். ஆனால் இந்த நாவலில் சம்பவிக்கும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், மிக்க அதிசயமும், தைரியமும், துணிகரமும் பொருந்தியவையுமான நடக்கைகளை வேறு நாவல்களில் வாசித்திருக்கமாட்டீர்கள். இதில் சம்பந்தப்படும் துப்பறிபவன் செயல்களும், குற்றவாளிகள் செயல்களும்,ஸ்திரீகளின் நடக்கைகளும் யாவுமே புதுவிதமான விசேஷம் பொருந்தியவைகளாகவேயிருக்கும். இது வாசிப்போர் மனதைக் கவரும் தன்மையும் அவ்வாறேயிருக்கும். வாசிப்போர்க்கு இதன் உண்மை யெளிதில் விளங்குமாதலால் நாம் அதிகமாய்க் கூறவேண்டியதில்லை. விலை அணு 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை.

## முக்கிய அறிவிப்பு.

ஜீவிய சந்தா:—ஜீவிய சந்தாவைக் குறைத்தால் பலர் ஜீவிய சந்தா தாரராகச் சேர விரும்புவதாக அறிவிப்பதால் "ஆனந்தபோதினி" க்கு ஜீவிய சந்தா நபா **15/0** ஆக ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. இப்போது ஜீவிய சந்ததாரராகச் சேர்ந்து ரூபா 25/0 கட்டி யிருப்போர் பதில் தெரி வித்தால் 10 ரூபாய் வாபீஸ் செய்யப்படும். இனி ஜீவிய சந்தாவில் சேர் வோர்கள் பெயர் சஞ்சிகையில் வெளியிடப்படும்.

பத்திராதிபர்.

---

## மாதர் நெறிகள்.

(36-ம் பக்கத் தொடர்ச்சி)

(ஆடவர்களாகிய நமது சகோதரர்களும் இவற்றை உணருமாறு வேண்டுகிறோம்.)

7. உங்கள் ஆண் மக்கள் நம் தாய்ப் பாஷையை யலட்சியம் செய்யாமல், முதலில் அதைப் பக்தியோடு கற்கும்படிச் செய்யுங்கள். அப்போதுதான் அவர்களுக்கு நமது உத்தம மதத்தின் சத்தியமும், பெருமையும் புலப்படும். நம் முன்னோருடைய ஆசாரங்கள் சாத்திர யுக்தமும், மதச் சம்பந்தமு முடையனவென்று அவர்கள் அறிந்து நடப்பார்கள். பின்னால் அவர்கள் எக்கல்வி கற்றாலும் தங்கள் நெறியினின்றும் விலகார்கள்.

அப்படிக்கில்லா விட்டால் பிற்காலத்தில் அவர்கள் எம்மதத்திலும் பற்றில்லாதவர்களாய் ஏறக்குறைய நாஸ்திகர்கள் போலாகி, பணம் சம்பாதிப்பதும், உண்பதும், உறங்குவதுமாகிய தொழிலை மட்டும் செய்யும் மிருக சுபாவ முடையவர்க ளாகிறார்கள். கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவதுகூட அநாகரிகத் தொழிலென்று கருதி விடுகிறார்கள். விதியில்லை யென்று உங்களுக்காகப் பேருக்கு மட்டும் இந்துக்களாக விருக்கிறார்கள். ஆங்கிலங் கற்றவர்களில் எத்தனையோ பேர் இவ்வாறு நடக்கிறார்கள். ஆங்கில பாஷையை அரை குறையாகக் கற்கு முன்பே நமது முன்னோரது ஆசார ஒழுக்கங்களை யெல்லாம் "ஆல் தீஸ் ஆர் நான்ஸென்ஸ்" (இவை யெல்லாம் மூடத்தனம்) என்று அலட்சியமாகக் கூறிவிடுவதே தாங்கள் ஆங்கிலம் கற்பதனாலடைந்த நாகரீகச் சீர்திருத்தத்தின் முதற்படி யென்று கருதுகிறார்கள். சுயமத உணர்ச்சியும், தாய்ப் பாஷைக் கல்வியும் இல்லாமையே இதற்குக் காரணம்.

சகோதரிகளே! உங்கள் புத்திரர்களை யிவ்வித நிலைமை யடையும்படி நீங்கள் விட்டு விட்டால், பின்னால் அவர்கள் என்ன கெதி யாவார்கள் என்பதையும், உங்கள் பெருமையும், உலகப்புகழ்ச்சியும் என்னாகு மென்பதையும், புண்ணிய பூமியாகிய நமது தாய்நாடு எத்தகைய இழிவான நிலை

மையை யடையுமென்பதையும் சிந்தித்துப் பாருங்கள். அந்தோ இத்தோஷம் உங்களைச் சேராது விடுமோ? ஆகையால் உங்கள் பிள்ளைகளுக்கு ஆரம்பத்திலேயே நம் தாய்ப் பாஷையையும், தெய்வபுத்தியையும், மதக் கல்வியையும், அவசியம் போதியுங்கள்.

8. இப்போது பெண்கல்வி விர்த்தியடையவேண்டு மென்ற கூக்குரல் நமது நாட்டில் எங்கும் கிளம்பி யிருப்பது யாவரும் அறிந்த விஷயமே. "பெண்கள் கல்விகற்றால் கெடுதி நேரிடும்; ஆகையால் அவர்களுக்குக் கல்வி கூடாது" என்று கூறுவோரும் இல்லாமலில்லை. அப்படிக் கூறுவோ ரெல்லாம் அறிவில்லாத மூடர்கள் என்பது சிலர் கருத்து. உண்மை யப்படியில்லை. கல்விமான்களான அறிவாளிகளிலும் பலர் அப்படிக் கூறுகிறார்கள். ஏனெனில் அப்படிக்கூற அவர்களுக்குக் காரணங்கள் அத்தாட்சிகளோடுண்டு. இந்த இரண்டு கட்சிகளுக்கும் காரணமுண்டு. ஆனால் பெண்களுக்குக் கல்வி அடியோடு கூடாதென்பது ஒப்பத்தக்கதா யில்லை. இவ்வாற்றால் உண்மையான அபாயமற்றவழி இரண்டிற்கும் இடையில் இருக்கவேண்டும் என்று நன்குணரலாம்.

சிலர் எதற்கும் மேல்நாடுகளைத் திருட்டாந்தமாக வெடுத்துக்கொண்டு "மேல்நாடுகளில் மாதர்கள் நன்றாகக் கல்வி கற்றிருப்பதால்தான் அந்நாடுகள் மேலான நிலைமையி லிருக்கின்றன வென்கிறார்கள். நவீனநாகரீகமயக்கத்தா லுண்டான இது முற்றும் தவறான அபிப்பிராயம். மேல் நாடுகள் சென்றவழிகளைப் பின்பற்றி நடப்பதால் நம் தாய் நாடு மேலான நிலைமைக்கு வருமென்று கருதுவது கனவிலும் நடவாதகாரியம். இரண்டு நாடுகளுக்குமுள்ள பேதங்கள், இருளும் ஒளியும், கடினமும் மென்மையும், சூடும் குளிர்ச்சியும், சாந்தமும் மூர்க்கமும் என்றவற்றிற் குள்ளவைபோன்ற கலக்கமுடியாத பேதங்களாகும். மேலும் மேல் நாட்டாரை நாம் முழுதும் பின்பற்றி நடக்கமுடியாது. இதுகாறும் மேல்நாட்டு நாகரீகத்தைப் புகழ்ந்துகொண்டு அதைப் பின்பற்றிச் செல்வதே நாகரீகச் சீர்திருத்தம் என்று கருதி அவ்வாறே பின்பற்றமுயலும் நம் நாட்டாரில் பலர், வெளிவேடமும், பழகிக்கொண்ட சில அனாசார வழக்கங்களும் தவிர வேறெந்தப் பயனுள்ள விஷயங்களில் மேல் நாட்டார் நெறிகளைக் கைப்பற்றி யிருக்கிறார்கள்? ஒன்றுமேயில்லை. இரண்டு நாட்டாரின் தற்கால நிலைமையிலேயே நேர்மாறான ஓர் முக்கிய பேதமிருக்கிறது. மரத்தின் மேலுள்ளவன்றான் பிரியமான கனியைப்பறித் துண்ணலாம்; கீழே தரையில் நிற்பவன் (மேலிருப்பவன் தயவாய் எறிந்தாலன்றி) எப்படிப் பறித்துண்ணலாம். மேலும் நாம் அப்படி முழுமையும் மேல் நாட்டாரைப் பின்பற்றி நடக்கமுயன்றாலும் அதற்கு ஓர் பெரிய தடையிருக்கிறது.

ஆகையால் மேற்கு மேற்கே, கிழக்கு கிழக்கே. அதன் நெறி நமக்குப் பயன்படாது. நமது சுபாவத்திற்கு அடியோடு பொருந்தாது. ஆகவே

அவர்களைப்போல் நமது பெண்கள் நடக்கமுயலலாகாது. நமது பெண்களுக்குக்கல்வி யளிப்பதில் நாம் மேலே கூறியபடி இடைவழி நடப்பதே உசிதம். எதுவும் அளவோடிருந்தாலே நன்மைபயக்கும். அளவுக்குமிஞ்சினல் அமிர்தமும் விஷமாகும். ஆகையால் நமது பெண்மக்களுக்கு முதலாவது தாய்ப்பாஷைக் கல்வியொன்றே உலகவாழ்க்கைக்கும் மறுமைப்பயனுக்கும் அவசியமானது. மாதர்க்கு அத்தியாவசியமான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, என்பவற்றையும், குடும்பத்தில் பெற்ருேர் உடன் பிறந்தரர் சுற்றத்தார் இவர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய முறைமைகளையும், மணம் முடிந்தபின் புருடனிடம் மனைவி எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், மாமியார் மாமனர் முதலியவர்களிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்பதையும், ஈசுரபக்தியையும், நமது மதத்தையும், குடும்பத்தில் சுகாதாரத்தைக் கவனித்தல், மக்களை வளர்த்தல் முதலிய இத்தகைய விஷயங்களையும் போதிக்கும் நூல்களே அவர்களுக்குக் கற்பிக்கப் படவேண்டும். சாதாரண அளவு பூமிசாத்திரமும் கணிதமும் தையல் முதலியவேலைகளும் அவசியமே. கடவுள் தோத்திரமாகிய தேவாரம் திருவாசகம் முதலியவற்றை யோதுவதற்கு அவசியமான சங்கீதமும் கற்பிக்கலாகும். மதக்கல்வி எவ்வளவு அதிகமாகக் கற்ருலும், எவ்வளவு ஆன்மார்த்த சாத்திரங்களை ஆராய்ச்சி செய்வதாயினும் அவ்வளவும் நலமே. நம் நாட்டுமாதரில் எத்தனையோபேர் ஞானிகளாகவும், மெய்ப்பக்தி யுடையோராகவும் இருந்திருக்கிருர்கள். இப்போதும் இருக்கிருர்கள். ஆண்டவன் அருளைப் பெற்றிருக்கிருர்கள். அதற்கு மேற்பட்ட அன்னிய பாஷைக் கல்வியும் உயர்தரக் கல்வியும் நமது பெண்களுக்கு அனுவசியமென்பதோடு பெருங்கேட்டை விளைவிக்குமென்பதைப்பற்றி அடுத்த சஞ்சிகையில் பிரத்தியேகமாக நிரூபித்துக் காட்டுவாம். நமது பெண்மணிகளுக்குத் தீமை விளைவிக்கும் கல்வியை யளிப்பதிலும், அவர்கள் கல்வி யில்லாது நல்லொழுக்க மட்டும் பொருந்தி யிருக்கச் செய்வது பெரும் புண்ணியமாகும். (தொடரும்.)

சீடன்.

---

## தபால் கொள்ளைக் காரர்கள்.

(38-ம் பக்கத் தொடர்ச்சி.)

அத்துஷ்டர்கள் அதனுல் அடங்கவில்லை. எனெனில் அதற்குள் சாமிநாதன் அங்கு வந்துவிட்டான். அவன் அம்பலவாணனை நோக்கிக் கதவின் பூட்டுத் துவாரவழியாய்க் கூப்பிட்டான். அம்பலவாணன் என் என்றபோது அவன்,

“நான் உன்னேடு பேசவேண்டிய திருக்கிறது, சற்று வெளியில் வா” என்ருன்.

அம்பலவாணன்:—" இது அதற்குத்தக்க சமைய மல்லவென்று நினைக்கிறேன் " என்றான்.

சாமிநாதன்:—" நீ ஒருவரிடத்திலிருக்கும் கன்னிகையை அர்த்தராத்திரியில் களவாடிக்கொண்டு வந்திருக்கிறாய். அவளை என்வசம் ஒப்பித்துவிடு " என்றான்.

அம்ப:—" நான் ஒருவர் அக்கிரமமாய்க் களவாடிக் கொண்டுவந்து சிறைவைத்திருக்கும் ஆளை மீட்டுக்கொண்டு வந்திருக்கிறேன் " என்றான்.

சாமி:—இல்லை; அவளை நான் கொண்டுவந்து வைத்திருப்பதற்குத் தக்ககாரணம் இருக்கிறது. அவளுடைய தந்தையின் பிரியப்படி நான் செய்கிறேன். உனக்கு அதைப்பற்றி ஒரு சம்பந்தமு மில்லை.

அம்ப:—" சாமிநாதம் பிள்ளை! நீ கூறுவது முழுதும்பொய். அம்மனிதனுகிய இரங்கநாதன் அவள்தந்தையல்ல. நீங்கள் இருவரும் அக்கிரமமாய் அப்பெண்ணைக் கொண்டுவந்து சிறைவைத் திருக்கிறீர்கள். நீ பேசாமல் இதில் பிரவேசிக்காமல் இதோடு நின்று விட்டால் தப்பித்துக் கொள்வாய் " என்றான்.

சாமி:—" சரி; நீ என் விஷயத்திற்கு இடையூறு செய்வதாயின் நாளையிரவு சிறைச்சாலையில்தான் நித்திரை செய்வாய் " என்று கூறிவிட்டுத் தன் ஆட்களோடு சென்றான்.

அன்றிரவு முழுமையும் அம்பலவாணன் ஜாக்கிரதையோடு காவல் இருந்ததால் விடியற் காலத்தில் அயர்ந்து நித்திரை போய்விட்டான்.

பொழுது விடிந்ததே அம்பலவாணன் தாயார் சாளரத்தின் வழியாய்ப் பார்த்தபோது இரண்டு போலீஸ் உத்தியோகஸ்தர்களும் அவர்கள் பின்னால் நாலைந்து மனிதர்களும் வருவதைக் கண்டாள். அவர்கள் வரும்வழியை நோக்க நேராய்த் தங்கள் வீட்டிற்கே வருவதாய்த் தெரிந்தது.

## 8—வது அத்தியாயம்

மேற் கூறப்பட்ட சம்பவத்தைக் கண்டதே அம்பலவாணன், அவன் தாய கோமளவல்லி, வேலைக்காரி, யாவரும் மிக்க வியப்போடும் திகிலோடும் வாயிற்படியில் வந்து நின்றார்கள். ஏதோ ஆபத்து நெருங்கிவருகிறது என்று அவர்கள் மனதிற் பட்டுவிட்டதால் அவர்கள் முகம் சவம்போல் வெளுத்து விட்டது.

முன்னே வரும் போலீஸ்காரருக்குப் பின்னால் சாமிநாதன் இரங்கநாதன் ஆகிய இரண்டு துஷ்டர்களும் இருந்தார்கள். வீட்டின் சமீபத்தில் வந்ததே சாமிநாதன் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனோடு முன் அணியில் வந்து, "இந்த வீடுதான் " என்று அந்த உத்தியோகஸ்தனிடம் கூறினான்.

அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தன் அம்பலவாணன் தாயாருக்கு வந்தனமளித்து "அம்மா! தங்கள் வீட்டைச் சோதனை செய்யும்படி வாரன்ட் பிறந்திறக்கிறது" என்றான்.

அம்மாது:—"அப்படியா! எங்கள் வீட்டைச் சோதனை போடும்படி அத்தகைய சந்தேகம் உண்டாயிருக்கிறதோ" என்றாள்.

போலீஸ் உத்தியோகஸ்தன்:—"ஆம் அம்மா! சந்தேகம் உண்டாகி இருப்பதால்தான் வாரன்ட் பிறந்திருக்கிறது; அதோடு இப்போது, அம்பலவாணனை மறுபடி சிறைசெய்ய உத்தரவு பிறந்திருக்கிறது." என்றான்.

அம்பலவாணன்:—"நான் இப்போதே பிணையில் இருக்கிறேன்; அப்படியிருக்க என்னை மறுபடி கைது செய்வானேன். என் வீட்டைச் சோதனை செய்வானேன்?" என்றான்.

போலீஸ் உத்தியோகஸ்தன்:—"உத்தரவு அம்மாதிரி; இப்போது உன்னைக் கைது செய்கிறோம்; சோதனையில் உன்மேல் ஒரு குற்றமும் ஏற்படாவிட்டால் உன்னையுடனே விடுதலைசெய்து விடுவோம்" என்றான்.

அம்பலவாணனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. நாம் ஒரு குற்றமும் செய்யாதிருக்க நமது வீட்டில் இவர்களுக்கு என்னசொத்து அகப்படும்; இவர்களுக்குள் சற்றுவது நம்பிக்கை யில்லாவிட்டால் இவ்வாறு துணிந்து வரமாட்டார்களே யென்று சிந்தித்துக் கொண்டே வந்தவர்கள் முகங்களை நோக்கினான். அப்போது தற்செயலாய்ச் சாமிநாதன் முகத்தை நோக்கினான். அவன் முகத்தில் ஒருவித சந்தோஷப் பிரகாசத்தைக் கண்டதும் அவனுக்கு யாவும் விளங்கிவிட்டது. கடந்த இரவு அவன் "நாளைய இரவு உன்னைச் சிறைச்சாலையில் சயனிக்கும்படி செய்கிறேன்" என்று கூறியது அம்பலவாணன் நினைவிற்கு வந்தது. "ஓகோ இவன் ஏதோ அக்கிரமவழியில் நம்மைச் சிக்கவைக்க ஏற்பாடு செய்திருக்கிறான்" என்று அவன்மனதிற் பட்டுவிட்டது. அவனுக்குப் பேரிடி விழுந்தமாதிரி யாயிற்று. அவன் முகம் சவம்போல் வெளுத்துவிட்டது.

இதற்குள் போலீஸார் வீட்டைச் சோதனைசெய்யத் தொடங்கினார்கள். மிக்க ஜாக்கிரதையோடு மூலைமுடுக்கு எங்கும் தேடித்தடவிப் பார்த்தார்கள். ஒரு பொருளும் அகப்படவில்லை; கடைசியில் வீட்டோடு சம்பந்தப்பட்ட ஒரு சிறு அறையிருந்தது. அது வீட்டிற்குச் சற்றுதூரத்திலிருந்த போதிலும் ஒரு சிறு சந்தால் வீட்டோடு சம்பந்தப்படுத்தப்பட் டிருந்தது. அதில் வறட்டி விறகு முதலியவை வைக்கப்பட்டிருந்தன. உத்தியோகஸ்தர்களில் ஒருவன் அங்குசென்று சில விறகுகளின் சந்திலிருந்து ஒரு பையையெடுத்து, "இதோ இதோ!" வென்றான்.

இன்னொருவன் அதை வாங்கிப் பார்த்து இதுதான் காணமற் போன தபால் பை யென்றான். இதைக்கண்ட அம்பலவாணன் கருடனைக் கண்ட

நாகம்போல் ஆவி சோர்ந்தான். அவனுக்குப் பேசவும் நாவெழவில்லை. அவனருகிலிருந்த அவன்தாய் கோவென்றலறி யப்படியே மூர்ச்சையாய் வீழ்ந்து விட்டாள்.

அம்பலவாணன் போலீஸ் உத்தியோகஸ்தனை நோக்கி "அய்யா! இப்பை யிங்கு எப்படி வந்ததோ எனக்குச் சற்றும் தெரியவில்லை; இது யாரோ விரோதி செய்த வேலை யென்று கடவுளறியக் கூறுவேன். அவர் அந்த இழிகுலச் சண்டாளனைத் தண்டிக்காமல் விடமாட்டார். நீங்களே கண்ணுற் காணப்போகிறீர்கள். நான் கடவுளறிய நிரபராதி" என்றான்.

போலீஸ் உத்தியோகஸ்தன்:—"இதை யாரோ அன்னியர் கொண்டு வந்து இங்கு வைத்தார்கள் என்பது நம்பிக்கொள்ளத் தக்கதல்ல. இதுவே களவுபோன பை யென்று ருசுவாகிறது. ஆகையால் சட்டப்படி நாங்கள் உன்னைக் கைது செய்துகொண்டு போகவேண்டியதே. பிறகு எப்படியும் விசாரணை நடக்கப் போகிறது. அப்போது உன் நிரபராதத் தன்மை ருசுப் படலாகும்" என்றான்.

அச்சமயம் இடிமேலிடி விழுந்த பாவனையாய் இரங்கநாதன் முன்னுக்கு வந்து, "அய்யா! இவன்மேல் இன்னொரு பெரிய குற்றமிருக்கிறது. அதாவது என் நண்பர் வீட்டிலிருந்த என்புத்திரியை இரவு இவன் களவாடிக்கொண்டு வந்து விட்டான்; அப்பெண் இப்போது இவ்வீட்டிலிருக்கிறது. அதை யென்வசம் ஒப்புவிக்கச் செய்யவேண்டும்" என்றான்.

உத்தியோகஸ்தன் அம்பலவாணனை நோக்கி "இதற்கென்ன மறுமொழி கூறுகிறாய்?" என்றான்.

அம்பலவாணன் கோபத்தோடு, "இந்த ஆள் கூறுவதெல்லாம் பொய்; அது இவன் குமாரத்தியல்ல; அனாதையான அப்பெண்ணை யிவர்கள் எந்தத் துஷ்டகாரியத்திற்கோ அதன் இரக்ஷகர்களிட மிருந்து களவாடிக்கொண்டு வந்து சிறையில் வைத்திருந்தார்கள். நான் அவளை விடுவித்துக்கொண்டு வந்து என்தாயார் வசம் விட்டிருக்கிறேன். இன்று அதன் இரக்ஷகர்களிடம் கொண்டுபோய் விடப்போகிறேன். அய்யா! உமக்குப் பெரும் புண்ணியம்; அப்பெண்ணை இம்மனிதன் வசம் ஒப்பிக்கவேண்டாம்" என்றான்.

உத்தியோகஸ்தன் முன்னமே அத்துஷ்டருக்கு உடந்தையாய்ச் சேர்ந்துகொண் டிருப்பவனாதலால், அப்பெண்ணே "அய்யா! இவன் என் தந்தையல்ல; என்னை யிவனிடம் ஒப்பிக்க வேண்டாம்" என்று அழுது கூறியும் அவன்,

உத்தியோகஸ்தன், "தந்தையின் அத்தாட்சிக்கு மீறி நடக்க எங்களுக்கு அதிகாரமில்லை; ஆதலால், நீ யுன் தந்தையோடு கூடவே செல்லவேண்டும்" என்று அவ்வாறே அவளை அத்துஷ்டனிடம் ஒப்பித்து விட்டான்.

(தொடரும்.)

ஆரணி குப்புசாமி முதலியார்.

## பொது விஷயங்கள்.

**பஞ்சாங்கம்:**—7-வது வருட சந்தாவை 1921ஸு ஜூன்மீ 30உக்குள் அனுப்பியவர்களுக்கு அடுத்த துந்துபி ஸூ பஞ்சாங்கம் அளிப்பதாகக் கூறப்பட்டது. அதை யறியாது சிலர் அதை யிப்போதே யேன் அனுப்ப வில்லை யென்று எழுதுகிறார்கள். துந்துபி ஸூ பிறக்க 3 மாதம் இருக்கும் போதே, அதாவது அடுத்த மாசிமீ அனுப்பப்படும் என்று மறுபடி யறிவிக்கின்றோம்.

**இளவரசர் வருகை.**—வேல்ஸ் இராஜ குமாரராகிய நமது இளவரசர் நமது நாட்டைப் பார்வையிட அடுத்த நவம்பர்மீ பம்பாய்த் துறைமுகத்தில் வந்திறங்குவா ரென்றும், ஜனவரிமீ சென்னைக்கு விஜயம் செய்வாரென்றும் தெரிகிறது. மற்ற விவரம் பின்னால் வெளியாகும்.

**சீனவர்த்தகம்:**—சீனதேசத்தில் அன்னியநாட்டு வர்த்தகக் கூட்டங்கள் அதிகமாக விர்த்தியாகிக்கொண் டிருக்கின்றன வெனத் தெரிகிறது. அங்கிருக்கும் அன்னிய நாடுகளின் வர்த்தகக் கூட்டங்கள் கீழ்க்கண்ட கணக்காக விருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| ஜபான் ... | ... 4,878 | பெல்ஜியம் ... | ... 20 |
| இரஷியா ... | ... 1786 | இடலி ... | ... 19 |
| இங்கிலாந்து | ... 644 | நார்வே ... | ... 12 |
| அமெரிகா ... | ... 413 | ஸ்பெயின் ... | ... 8 |
| பிரான்ஸ் ... | ... 171 | ஆஸ்ட்ரியா ... | ... 5 |
| போர்த்துகல் | ... 93 | ஸ்விட்ஸர்லாந்து | ... 4 |
| டென்மார்க் ... | ... 27 | ஜர்மெனி ... | ... 2 |
| ஹாலண்ட் ... | ... 25 | | |

நம் இராஜதானியிலுள்ள 2 ஜில்லா, 3 ஜில்லாக்களின் அளவுள்ள இராஜ்ஜியங்களி லுள்ளவர்கள் கூட அங்கு சென்று நிலையாக வர்த்தகம் செய்கின்றார். அந்தோ! நம் இந்தியா வர்த்தகத்தில் எந்நிலைமையி லிருக்கிறதென்பதைக் கவனிப்பவர்கள் யார்?

**உலகத்தில் உயரமான மலை:**—உலகிலுள்ள எல்லா மலைகளிலும் உயரமானது இமய மலையிலுள்ள எவரஸ்ட் என்ற ஒரு சிகரமே. இதன் உயரம் சுமார் 30 ஆயிரம் அடி (செங்குத்தாக). இதற்கிரண்டாவது கேஞ்சஞ்சிங்கா, மூன்றாவது தவளகிரி. இப்போது எவரஸ்ட் சிகரத்தின் உச்சியைக் காண்பதென்று எண்ணங்கொண்டு துரைத்தனத்தார் ஒரு சிறு கூட்டத்தை யனுப்பி யிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு வேண்டிய ஆகாரம் முதலியவற்றைக் கோவேறு கழுதைகள் முதலியவற்றின் மேல் ஏற்றிக் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

# "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்.

## துன்மதிஞூ புரட்டாசிமீ—சாலிவாகனம் 1844—கலி 5023

## பசலி 1330-31—கோல்லம் 1096-97—ஹிஜரி 1339-40

## இங்கிலீஷ் 1921ஞூ செட்டம்பர்மீ அக்டோபர்மீ

| புரட்டாசி | செப்டம்பர் / 1921ஞூ அக்டோபர்மீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | வெ | சது12-1 | சதை-20-56 | சித்-60 | உமாமகேஸ்வர விரதம் |
| 2 | 17 | சனி | ○17-0 | பூரட்-27-12 | ம27-12சி | மாலயபட்சம் ஆரம்பம் |
| 3 | 18 | ஞா | பிர21-14 | உத்-32-47 | அமி60 | அசூன்யசயன விரதம் |
| 4 | 19 | திங் | து24-34 | ரேவ-37-22 | சித்-60 | கோடியுடுக்க, விதைவி |
| 5 | 20 | செ | திரி26-55 | அசு-41-0 | சித்-60 | பிரயத்புமா விரதம் |
| 6 | 21 | புத | சது28-3 | பர-43-27 | சி43-27அ | வாகனம் வாங்க |
| 7 | 22 | வியா | பஞ்28-0 | கிரு-44-41 | மர-60 | கிருத்திகை |
| 8 | 23 | வெ | சஷ்26-34 | ரோ-44-38 | ம44-38சி | சந்திரசஷ்டி விரதம் |
| 9 | 24 | சனி | சப்23-46 | மிரு-43-13 | சித்-60 | மகாலட்சுமி விரதம் |
| 10 | 25 | ஞா | அ19-40 | திரு-40-30 | சித்-60 | துர்க்கை நவமி |
| 11 | 26 | திங் | நவ14-25 | புன-36-37 | அ36-37சி | உபநயனம் செய்ய |
| 12 | 27 | செ | தச7-55 | பூச-31-47 | சித்-60 | இந்திர ஏகாதசி |
| 13 | 28 | புத | ஏகா0-42 துவா53-1 | ஆயி-26-10 | சித்-60 | மாடு வாங்க |
| 14 | 29 | வியா | திர45-4 | மக-20-13 | அ20-13சி | பிரதோஷம், |
| 15 | 30 | வெ | சது37-21 | பூர-14-11 | சித்-60 | ஆயுதம் பயிற்ற |
| 16 | 1 | சனி | ●29-46 | உத்-8-28 | மர-60 | மாளைய அமாவாசை |
| 17 | 2 | ஞா | பிர23-18 | அஸ்-3-30 | சித்-60 | நவராத்திரி ஆரம்பம் |
| 18 | 3 | திங் | து18-2 | சித்-59-38 | அ57-3மர | |
| 19 | 4 | செ | திரி14-15 | சுவா-57-3 | ம56-10சி | |
| 20 | 5 | புத | சது12-10 | விசா-56-10 | சித்-60 | |
| 21 | 6 | வியா | பஞ்11-27 | அனு-57-8 | பி59-52சி | |
| 22 | 7 | வெ | சஷ்13-42 | கேட்-59-52 | அமி60 | |
| 23 | 8 | சனி | சப்17-0 | மூல-60-0 | சித்-60 | |
| 24 | 9 | ஞா | அஷ்21-46 | மூல-4-25 பூரா-10-20 | சி10-20அ | |
| 25 | 10 | திங் | நவ 27-28 | உத்-17-15 | ம17-15அ | |
| 26 | 11 | செ | தச 33-43 | திரு-24-44 | சித்-60 | விஜயதசமி |
| 27 | 12 | புத | ஏகா39-48 | அவி-32-3 | பிர32-3சி | பாசாங்குச ஏகாதசி |
| 28 | 13 | வியா | துவ45-22 | சதை-38-56 | ம38-56சி | வாமன ஜயந்தி |
| 29 | 14 | வெ | திர50-0 | பூரட்-45-3 | சித்60 | கரிநாள், பிரதோஷம் |
| 30 | 15 | சனி | சது53-35 | உத்-50-6 | சி50-6பிர | கோடியுடுக்க, யாத்திரை |

| | | | |
|---|---|---|---|
| கே | | | |
| | 5உ சி-சு<br>9 ,, க-கு<br>29 ,, க-சு | | சுக் |
| | | | செ |
| | | | குரு சனி |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE
"ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.